# "பொய்யடிமை இல்லாத புலவர்" யார்?

(ஓர் ஆராய்ச்சி நூல்)

எழுதியவர் :

பேராசிரியர் :

வித்துவான். பாலூர். கண்ணப்ப முதலியார், B. O. L., M. A

*சென்னைப் புதுக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்.*

விற்பனை உரிமை :

உரிமை ஆசிரியர்க்கே] 1958 [விலை 1=25

# ஆசிரியர் - முன்னுரை

ஆளுடைய நம்பிகளாம் நாவலூர்ப் பெருமானார், தம் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்டுள்ள பொய் யடிமை இல்லாத புலவர் என்பார் யார்? என்பதைப் பற்றிய ஆசங்கை பல அறிஞர் உள்ளத்தில் ஊடுருவி யுள்ளது. ஒரு சிலர் அப்புலவர்கள் சங்ககாலச் சான்றோர் என்பர். வேறு சிலரது எண்ணம் திருவாசகமாம் தேனைப் பொழிந்த திருவாதவூரராம் மாணிக்கவாசகர் என்பது. யான் பின்னவர் கருத்துக்குப் பெரிதும் உடன்பட்டவன். என் கருத்துக்குப் பெருந்துணையாகச் சேக்கிழார் பெரு மானார் மொழிகளைச் சிக்கெனப் பிடித்து, இவ்வாய்வு நூலை எழுதியுள்ளேன். மேலும், என் கருத்தினை நிறுவிக்காட்ட அகச்சான்றுகளையும், புறச்சான்றுகளையும் ஆங்காங்கு எடுத்துக் காட்டியுள்ளேன்.

இந்த அளவில் இந்நூலினை நிறுத்தாது அருண் மொழித் தேவராம் சேக்கிழார் பெருமானார், தம் நூலாகிய பெரிய புராணத்தில் திருவாசகத்தினின்று எடுத்து ஆண்டுள்ள சொற்களையும், தொடர்களையும், கருத்துக் களையும் எடுத்துக் காட்டியுள்ளேன். இந்நூலை அறிஞர்கள் கண்ணுற்று, யான் இத்தகைய தொண்டில் இறங்கி, மேன்மேலும் உழைத்தற் பொருட்டு, எனக்கு ஆக்கமும் ஊக்கமும் உதவுமாறு பெரிதும் வேண்டிக் கொள்கிறேன்.

இந்நூலை நன்கு படித்து, தம் உள்ளக் கருத்தினை உவகையுடன் எழுதி உதவிய பேரறிஞர் பெருமக்களுக்கு என் நன்றியறிதலான வணக்கத்தினைப் பணிவுடன் அறி வித்துக் கொள்கின்றேன்.

பா. து. க.

# மதிப்புரைகள்

## சென்னை மாவட்ட ஓய்வுபெற்ற கல்வித்துறை அதிகாரியும் முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளரும் (ரிஜிஸ்ட்ரார்) ஆகிய

## உயர்திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை பி.ஏ., எல்.டி. எழுதியது.

"பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" இந்த வினா பல நூற்றாண்டுகளாக அறிஞர் பலர் உள்ளங்களில் எழுந்தெழுந்து திடமான விடை பெறாமல் ஒடுங்கி ஒடுங்கி ஒளிந்திருந்திருக்க வேண்டும். எழுத்து வடிவில் இந்த வாதம் வெளிவந்தது சரித்திர ஆராய்ச்சி நாட்ட மிக்க இந்த நூற்றாண்டில்தான் என்று தோன்றுகிறது. மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி பற்றி Tamilian Antiquary முதலிய சில சிறந்த திங்கட்டாள்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலவற்றைத் தந்தன. மறைமலையடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை முதலிய பல அறிஞர்கள் அரிய நூல்கள் எழுதினர். எழுதியும் மாணிக்கவாசகர் தேவாரமுதலிகள் மூவர்க்கு முந்தியவரா பிந்தியவரா என்னும் வாதம் இன்னும் தீரா வழக்காகவே இருந்து வருகிறது. மேற்குறித்த அறிஞர்கள் அவர் முந்தியவர் என்று கட்டுரைக்கின்றார்கள். எஸ். வையாபுரிப்பிள்ளை, பழனியப்பப்பிள்ளை போன்ற ஆராய்ச்சியாளர்கள் அவர் பிந்தியவர் என்கின்றார்கள். அவரவர்களும் காரணம் காட்டித் தமது முடிவை நாட்ட முயன்றுள்ளனர்.

இந்த நிலையில் வித்துவான் - பாலூர் கண்ணப்ப முதலியாரும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு இந்த நூலைத் தமிழுலகிற்கு அளித்துள்ளார். இம் முயற்சி வரவேற்கத் தக்கதே. இந் நூலிற் பதினான்கு பகுதிகள் உள்ளன. இவற்றுள் (i) "பொய்யடிமை இல்லாத புலவர் தனியடியாரோ அன்றித் தொகை யடியார் ஆவார்"

என்று நாட்டும் பகுதியும் (ii) மாணிக்கவாசகர் மூவர்க்கும் பிற்பட்டவர் என்னும் கூற்றினை மறுக்கும் பகுதியும், (iii) அவர் மூவர்க்கும் முற்பட்டவரே என்பதற்குப் பல காரணங்கள் காட்டும் பகுதியும், (iv) சேக்கிழார் பொய்யடிமை இல்லாத புலவரைச் சங்கப் புலவராகக் கருதிலர் என்னும் பகுதியும் சிறப்பு வகையில் கவனிக்கத் தக்கவை. " கலையார் அரிகேசரியாய் போற்றி " என்னும் மணிவாசகத்திலிருந்து அரிகேசரி நல்லூர்க் கல்வெட்டில் காணும் அரிகேசரி மாறவர்மன் என்னும் 7 ஆம் நூற்றாண்டு பாண்டிய மன்னன் காலத்திற்குப் பிற்பட்டவர் மணிவாசகர் என்று ஓர் ஆராய்ச்சியாளர் முடிவு காட்டினார். இதனை இந்நூலாசிரியர் காழிதாண்டவராயர் எழுதிய திருவாசக வியாக்யானத்தில் " அரிகேசரி " என்பதற்கு அடியோடு வேறு பொருள் கொள்ளப்பட்டிருப்பதை எழுதிக்காட்டி மறுத்திருப்பதும் கவனிக்கத்தக்கது. திருவாசக முழுவதற்கும் விரிவான உரையைச் சில்லாண்டுகட்கு முன்னர் எழுதிய பேராசிரியர் நவநீத கிருஷ்ண பாரதியாரும் மணிவாசகர் மூவர் முதலியவர்கட்கு முற்பட்டவர் என்றே மொழிந்துள்ளார். எனது ஆராய்ச்சியிற் புலப்பட்ட உண்மையும் இதுவே.

இந்நூலின் இறுதிப் பகுதியாய் அமைந்துள்ளது, " திருவாசகமும் பெரியபுராணமும்" என்பது. இதன்கண் சேக்கிழார் பெருமான் திருவாசகத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்ததைக் காட்டப் பல சான்றுகள் தரப்பெற்றுள்ளன. இத்துறையில் இவ்வளவு விரிவாய் வேறெவரும் எழுதியிருப்பதாக யான் அறிந்திலேன். இப்பகுதியைப் படிப்பது கரும்பை நுனியிலிருந்து அடிவரையில் சுவைத்துக்கொண்டு போவது போற் சுவைக்கின்றது. இந்த இருபத்தொன்பது பக்கங்களும் சிறப்பு வகையில் அனைவரும் படித்து இன்புறத் தக்கவை. தமிழ் ஆராய்ச்சி செய்யும் கல்லூரி மாணவர்கட்கும் இந்நூல் பயன்படக் கூடியதாகும்.

இவ்வாசிரியர் சிறந்த தமிழ்ப் புலமையும் வாதத்திற்குரிய பொருள்களையும் தெளிவாக எடுத்துரைக்கும் திறமையும், அழுத்தமான தெய்வப்பற்றும், தூய நற் சிந்தையும் உடையவர் என்று இந்நூல் இனிது காட்டுகின்றது. இவர் இத்தகைய நூல்கள் பல இன்னும்

எழுதத் திருவருள் தூண்டுவதாக. இவர் போன்ற புலவர்களின் அறிவுத்தொண்டிற்கு ஆர்வத்துடன் ஆதரவளித்தல் கடன் என்று தமிழுலகமும் சைவ உலகமும் உணர்ந்து ஆவன செய்யும் என்று நம்புகின்றேன்.

சென்னை }
30-1-1956 }

---

தர்ம ரட்சாமணி - பிரம்மஸ்ரீ. கி. பாலசுப்பிரமணிய அய்யர்
பி. ஏ., பி. எல்., எம். எல் சி., சென்னைப் பல்கலைக்கழக
சின்டிகேட் அங்கத்தினர் எழுதியது.

திருவாளர் வித்துவான்-பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் நல்ல சிறந்த தமிழ்ப் புலவர். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். ஆராய்ச்சி முறையையும் நன்கு பயின்றவர். இராயப்பேட்டைப் புதுக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருக்கிறார்.

ஆளுடைய நம்பிகள் நாவலூர் பெருமானார் திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டுள்ள "பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து அது மாணிக்கவாசகப் பெருமான் தான் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். அதைப்பற்றிப் பல சான்றுகளும் பல காரணங்களும் வெகு அழகாக நமக்கு இந்தச் சிறு நூலில் நன்கு தெரிவிக்கிறார். மிகவும் பொருத்தமாக இருக்கிறதென்றே இந்த நூலைப் படிக்கிறவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அகச்சான்றுகள், புறச்சான்றுகள் இவ்விரண்டையும் இந்நூலில் காட்டி யுள்ளார்கள். அவர் தமிழ் வசன நடையும் வெகு அழகாக இருக்கிறது. மேற்படி நூலைப் படித்துப் பெருமக்கள் இன்புறுவதுடன் நல்லறிவும் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழ் நூலை நன்கு அறியாத என் போன்றவர்களை இதற்கு மதிப்புரை எழுதும்படி சொன்னதின் கருத்தாவது தமிழர்களில் யாராயினும் இதைப் படித்தால் இந்த நூலின் கருத்தைப் பற்றி

அதே முடிவுக்குத்தான் வரக்கூடும் என்பதைக் காண்பிப்பதற்குத் தான் என்று நான் நினைக்கிறேன். வித்துவான்-பாலூர்-கண்ணப்ப முதலியார் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

சென்னை, அரசினர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும்
தமிழ்ப்பேராசிரியரும் ஆகிய பன்மொழிப் புலவர்
வித்துவான் - தே. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை எம். ஏ.,
எம். ஓ. எல். எழுதியது.

திருவாளர் - பாலூர் - கண்ணப்பமுதலியார் இயற்றிய "பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" என்ற நூலை ஓதும்பேறு பெற்றேன். இவ்வாறு எழும் வினுவிற்கு ஏற்றதொரு விடையாக மணிவாசகரே எனப் பல சான்றுகள் காட்டிக் கூறுகின்றூர். சேக்கிழார் திருவாசகத்தில் திளைத்து நிற்பதனையும் இனிதே விளக்குகின்றூர். சிக்கலான கேள்வி இது. இருந்தாலும் இவர் நூல் இனிதாகவும் எளிதாகவும் அமைந்துள்ளமை பாராட்டத்தக்கதே யாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
உயர் திருவாளர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை,
எம்.ஏ. பி.எல்., எம்.எல்.ஸி. அவர்கள் எழுதியது

எனது நண்பர் திரு பாலூர். கண்ணப்ப முதலியார், "பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" என்னும் நூலை எழுதியுள்ளார். அவருடைய அறிவு, ஆற்றல், விளக்கும் முறை இவைகளைத் தமிழ் உலகமும் சைவ உலகமும் நன்கு அறியும். அவர் எழுதியுள்ள இந்த நூல் அவரது ஆராய்ச்சித் திறனை விளக்கமாக எடுத்துக்காட்டும் நிலையில் அமைந்துள்ளது.

"பொய்யடிமை இல்லாத புலவர்" என்னும் இத்தொடரில் குறிப்பிடப்பட்டவரைப் பற்றிக் கருத்துவேற்றுமைகள் உண்டு. கருத்துவேற்றுமைகளுள் ஒன்று அத்தொடர் சங்கப்புலவர்களைக் குறிப்பதாகும் என்பது. ஆனால், நண்பர் கண்ணப்ப முதலியார் எழுதியுள்ள பொய்யடிமை இல்லாப் புலவர் யார் என்னும் இந்நூல் மாணிக்கவாசகர்தாம் இந்தத் தொடரில் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டி நிற்கின்றது. மேலும், மாணிக்கவாசகர் மூவர் முதலிகட்கும் முன்னவரே அன்றிப் பின்னவர் ஆகார் என்பதைத் தக்க காரணங்களுடன் எடுத்துக்காட்டி விளக்கி இருப்பதும் நாம உற்றுக் கவனிக்கவேண்டிய பகுதியாகும். இவற்றுடன் சேக்கிழார் பெருமான் திருவாசகத்தில் நன்கு தோய்ந்து அந்நூலின் அருந்தொடர்களையும் கருத்துக்களையும் தமது பெரிய புராணத்தில் எடுத்து ஆண்டிருப்பது அறிஞர்க்கொரு புது விருந்தாகும்.

இந்நூல் பொதுவாகத் தமிழ் உலகிற்கும், சிறப்பாக ஆராய்ச்சி உலகிற்கும் பெருந்துணையாக நின்று நிலவும் என்பது எனது நம்பிக்கை.

தமிழ் உலகம் இந் நூலை வரவேற்று நண்பருக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் என நம்புகிறேன்.

29—6—'56.

---

நியூ டெல்லி, ராவ்சாகிப் ஜி. வன்மீகநாதப் பிள்ளை, பி. ஏ. அவர்கள் எழுதியது.

தாங்கள் அன்புடன் அனுப்பிவைத்த "பொய்யடிமை இல்லாத புலவர் யார்" என்ற ஆராய்ச்சி நூலைப் பெற்றுப் படித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். திருவாசகமும் பெரியபுராணமும் என்ற பகுதியில் பொதுவாகவும் 88-89-ஆம் பக்கங்களில் சிறப்பாகவும் எப்படிச் சேக்கிழார் பெருமான் மாணிக்கவாசகரின் பதங்களையோ அல்லது அவை தொனிக்கும் பதங்களையோ தம் பாடல்களில் அமைத்துள்ளார் என்பதை அரிது சுட்டிக்காட்டி இருப்பதிலிருந்து சேக்கிழார் பெருமான் திருவாசகத்தைச் செவ்வையாகப் பயின்றிருக்கின்றார் என்று ஐயம் நிறைந்தவர் மனத்தையும் தெளிவிக்கும். அது மட்டும் அன்றிப் பொய்யடிமை இல்லாத புலவர் புராணம் கொண்டுள்ள இரண்டே செய்யுட்களில் சொல்லுக்குச் சொல் மாணிக்கவாசகரையே சுட்டிப் பறைசாற்றுவதாகக் கொள்ளலாம் என்று காட்டியுள்ள திறமையை வியந்து பாராட்டுகின்றேன்.

தாங்கள் காட்டியுள்ள சான்றுகளை மறுப்பது எளிதன்று. மெய்யை மறுப்பது எப்படி முடியும்? இரண்டே பாட்டுகளாயினும் ஒவ்வொரு சொல்லும் எவ்வெவ்வெழுத்தால் அமைந்தாலும் மணிவாசகர் என்றே ஒலிக்கின்றன என்று நிலைநாட்டிய தங்கள் மெய்யறிவைப் போற்றுகின்றேன்.

18—9—'57.

# உள்ளுறை

பக்கம்

தோற்றுவாய் ... 1
திருத்தொண்டத் தொகைப் பதிகத்தின் அமைப்பு முறை ... 2
சேக்கிழார் வாக்கும் நம்பியாண்டார் போக்கும் ... 5
நம்பியாரூரரின் அறிவுத்திறன் ... 7
பொய்யடிமை இல்லாத புலவர் தனியடியாரே அன்றித் தொகையடியார் ஆகார் ... 8
மாணிக்கவாசகர் மூவர்க்கும் பிற்பட்டவர் என்று கூறுவார் கூற்றுக்களும் அவற்றிற்குரிய மறுப்புக்களும் ... 12
மணிமொழியார் மூவர் முதலிகளுக்கும் முற்பட்டவர் என்பதற்குரிய காரணங்கள் ... 27
மணிமொழியார் அடியார் கூட்டத்தில் இருக்கவே அவாவுவர் ... 38
பொய்யடிமை இல்லாத புலவர் என்று கூறப் பட்டதன் நோக்கம் ... 40
நாயன்மார் அறுபத்து மூவர்தாம் என்பது எவ் வாறு பொருந்தும்? ... 41
பொய்யாமை இல்லாத புலவர் மணிமொழியார் என்பதை அவர் வரலாற்றால் அறிதல் ... 43
சேக்கிழார் பொய்யடிமை இல்லாத புலவரைச் சங்கப் புலவராகக் கருதிலர் ... 44
மாணிக்கவாசகர் பெரும் புலவர் என்பதற்குரிய காரணங்கள் ... 50
திருவாசகமும் பெரியபுராணமும் ... 64

# "பொய்யடிமை இல்லாத புலவர்" யார்?

## தோற்றுவாய்

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது திருவாசகத்தைப் பற்றி வழங்கும் தொன்றுதொட்ட பழமொழியாகும். பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட கவிகள் அமைந்த நூல் திருத்தொண்டர் புராணம் என்பது உலகறிந்த உண்மையாகும். முன்னது தோத்திர வடிவில், உள்ளத்தை உருக்கவல்லது. பின்னது தொண்டர் வரலாற்று முறைமையினைக் கூறும் போக்கில் மனத்தைக் கனியச் செய்வது. திருவாசகத்தின் ஆசிரியர் ஆளுடைய அடிகளார் என்னும் மாணிக்கவாசகர். திருத்தொண்டர் புராண ஆசிரியர் அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமானார். முன்னவர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் திகழ்ந்தவர். பின்னவர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் விளங்கியவர். ஆகவே, அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமானார் திருவாதவூரரிடத்தும், திருவாசகத்தினிடத்தும் எந்த அளவு ஈடுபட்டிருந்தனர் என்பதை ஆராய்வதோடு, பொய்யடிமை இல்லாத புலவர் யார் என்பதையும் ஆய்வு செய்வது இந்நூலின் சிறப்புடைக் குறிக்கோளாகும்.

சேக்கிழார் பெருமானார், ஆளுடைய நம்பிகள் திருவாய் மலர்ந்த திருத்தொண்டத் தொகையினையும், நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளிய திருத்தொண்டர்

திருவந்தாதியினையும் முறையே முதல் நூலாகவும் வழி நூலாகவும் கொண்டு, சார்பு நூலாகப் பெரிய புராணத்தைப் பாடி முடித்தனர். சேவையர் காவலர் திருத்தொண்டர் புராணமாம் பெரியபுராணத்தைத் தவிர்த்து, வேறு ஒரு நூல் செய்ததாகப் புலனாகவில்லை. என்றாலும், அன்னாருக்கு வாதவூர்ப் பெருமானாராகிய மாணிக்கவாசகரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பையும், அப்பெருமானார் நூலாகிய திருவாசகப் பொருள்களையும் எவ்வாறு தம் நூலில் இணைத்து, எம்முறையில் பாடி அமைப்பது என்ற எண்ணம் மட்டும் உள்ளத்தில் ஊடுருவி இருந்தது என்பது பெரியபுராணத்தினை ஊன்றி அமைதியுடன் படிக்கும்போது தோன்றாமல் இராது. ஆனால், மணிமொழியாரது வரலாற்றுக்குறிப்பு வெள்ளிடைமலை யென வெளிப்படத் தோன்றாது, இலை மறைகாய் போல மறைமுகமாவே இவரது நூலில் நுட்பமாய் அமைந்து, திருவாசக ஆட்சி மட்டும் வெளிப் படையாகத் தோற்றுவித்துக்கொண்டு நிகழ்கிறது. இனி, இவ்விரு அமைப்புக்களும் எவ்விடத்தில் எம்முறையில் அமைந்திருக்கின்றன என்பதைக் காண்போமாக. இங்ஙனம் காண்பதற்கு முன், திருத்தொண்டத் தொகையைப் பற்றிச் சிறிது ஆராய்தல் இன்றியமையாததாகும்.

## திருத்தொண்டத்தொகைப் பதிகத்தின் அமைப்பு முறை

திருத்தொண்டத் தொகையில் உள்ள திருப்பாடல் கள் மொத்தம் பதினொன்று. அவற்றுள் தனியடியார் களைப் பற்றிய குறிப்புக்களை உணர்த்தும் திருப்பாடல் கள் முதல் ஒன்பது பாடல்களும், ஈற்றுப் பாடலாக அமைந்த பதினோராவது பாடலும் ஆகப் பத்துப்

பாடல்கள். இடையில் உள்ள பத்தாவது திருப்பாடல் தொகையடியார்களைப் பற்றியே குறிப்பிடும் பாடலாகும். இந்தப் பத்தாவது பாடல் அமைந்துள்ள போக்கினை உற்று நோக்கும்போது, நம்பி ஆரூரர் தம் நுண்ணறிவுத் திறனால் தொகையடியார்களைத் தனித்ததொரு பாடலில் குறிப்பிட வேண்டுமென்ற சீரிய நோக்கங்கொண்டே பாடி அமைத்துள்ளார் என்பது சிறிது ஊன்றிச் சிந்தித்த அளவில் புலனாகிவிடும்.

இங்ஙனம் இருக்கத் திருத்தொண்டத் தொகையில் ஏழாவது பாடலின் தொடக்கமாக அமைந்துள்ள பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன் என்னும் அடியில் உள்ள பொய்யடிமை இல்லாத புலவர் என்பாரையும் தொகையடியார் எனக் கருதிவிட்டனர் நம்பியாண்டார் நம்பிகள். நாவலூர்ப் பெருந்தகையாரால் பொய்யடிமை இல்லாத புலவர் என்று குறிப்பிடப் பட்டவர்கள் கடைச் சங்ககாலத்துப் புலவர்களாகிய கபிலர், பரணர், நக்கீரர் ஆதியோர் ஆவர் என்ற கருத்தினை வற்புறுத்த நம்பியாண்டார் நம்பிகள்,

" தரணியில் பொய்மை இலாத்தமிழ்ச் சங்கம் அதில்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயும் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருள்அமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே "

என்றும் பாடிவிட்டனர். இவரது போக்கினை ஒட்டி உமாபதியார் தாம் அருளிச் செய்த திருத்தொண்டர் புராண சாரத்திலும்,

பொய்யறியாக் கபிலரொடு பரணர் ஆதிப்
புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த ஓதிச்
செய்யுளிடை வளராசு மதுரம் நல்ல
சித்திரம்வித் தாரமெனத் தெரிக்கும் செம்மை

மெய்யுடைய தொடைகளெல்லாம் மன்றன் ஆடல்
மேவியகோன் இருதாளில் விரவச் சாத்திக்
கையுடையஞ் சலியினராய் அருளால் மேலைக்
கருதரிய அமருலகம் கைக்கொண் டாரே.

என்று பாடிவிட்டனர்.

பொய்யடிமை இல்லாத புலவர் தொகையடியார் களே ஆவர் என்பதாயின், ஆளுடைய நம்பிகள் அவர் களைத் தனியாடியார்களைக் குறிப்பிடும் பாடலில் இயைத்துக்கூறுர். "தொகையடியார்களைக் குறிப்பிடும் பத்தாவது பாடலில் பொய்யடிமை இல்லாத புலவர்க ளாகிய தொகையடியார்களைக் குறிப்பிட யாப்பு இடந் தராமையின், முன்னர் குறிப்பிட்டனர்." என்று சாதிக்க முற்படுவாராயின், அவர்கள் உளங்கொளும் முறையில் ஒருசில கூறுதல் இன்றியமையாததாகும்.

பொய்யடிமையில்லாத புலவர் தொகையடியார் என்பது கருத்தாயின், சுந்தரர் ஒன்பதாவது செய்யுளின் இறுதியில் குறிப்பிட்டேனும், பதினோராவது செய்யு ளின் தொடக்கத்தில் குறிப்பிட்டேனும் பாடித் தொகையடியார்களுக்கெனப்பாடி அமைத்த பத்தாவது செய்யுளுடன் இயைபு காட்டிச் சென்றிருப்பர். இங் ஙனமெல்லாம் செய்யாமல், தனியடியார்களைப் பற்றியே குறிப்பிட்டுப் பாடிவருகின்ற போக்கில் பொய்யடிமை யில்லாத புலவரையும் இணைத்து, அடுத்த எட் டாவது ஒன்பதாவது செய்யுளிலும் தனியடியார் களையே நிரைந்துபாடிக்கொண்டு சென்றுர் ஆதலின், பொய்யடிமை இல்லாத புலவர் நம்பியாண்டார் நம்பிகள் நினைவுப்படி தொகையடியார் ஆகார். நம்பியாரூரர் தொகையடியார்களுக்கெனத் தனித்தொரு பாடலைப் பாடாது, அத்தொகையடியார்களைத் தமது திருத்

தொண்டத் தொகைப் பாடல்களின் இடையிடையே அமைத்துப் பாடிச் சென்றிருப்பினும், தனியடியார்களுடன் இணைத்துப்பேசிய பொய்யடிமை இல்லாத புலவரைத் தொகையடியார் என ஒருவேளை கொள்ளலாம். அதுவும் செய்யாத காரணத்தால், அத்தொடரில் குறிப்பிடப்பட்ட புலவர் தனியடியாரே ஆவார்; சேக்கிழாருக்கும், "பொய்யடிமை இல்லாத புலவர், தொகையடியார் அல்லர் தனியடியாரே ஆவர்" என்பது கருத்தாகும்.

## சேக்கிழார் வாக்கும் நம்பியாண்டார் போக்கும்

நம்பியாண்டார் நம்பிகள் பாடியுள்ள நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புக்களை அப்படியே ஒப்புக்கொண்டு, குன்றைப் பிரானார் தம் நூலைப் பாடி முடிப்பவர் அல்லர் என்பது, பெரிய புராணத்தை ஊன்றிப் பயிலுங்கால் நன்கு விளக்கமாகிறது. இதனை உறுதிப்படுத்த ஓர் இடத்தினைக் குறிப்பிட்டால் இக்கருத்து நன்முறையில் வலியுறும் அன்றோ ?

இதுபற்றி நமது கருத்தைச் சிறிது அமர்நீதி நாயனார் புராணத்தில் செலுத்துவோமாக. அமர்நீதி நாயனார், தம் மாட்டுப் பிரமசாரியாய் வந்த இறைவர் வைத்துச்சென்ற கோவண ஆடைக்கு ஈடாகத் தம்மிடம் உள்ள அறுவைகள், அரும்பொருள்கள் பலவற்றையும் தராசுத் தட்டில் இட்டும் நிறைகாணாது நின்ற நிலையில், வேறு வழி இன்றித் தாமும், தம் மனைவியாரும், தம் அருமை மகவும் ஆக மூவரும் தட்டில் ஏறியபோது நிறை காணப்பட்டது. அதுபோது இம்மூவரும் தராசுத்தட்டில் இருந்துகொண்டே பிரமசாரியாக வந்த இறைவரை வணங்கிப் பேறுபெற்ற குறிப்பினை,

தொழுது போற்றியத் துலைமிசை நின்றனோர் துதிக்கும்
வழுவில் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத்தம் முன்தொழு திருக்கும்
அழிவில் வான்பதம் கொடுத்தெழுந் தருளினார் ஐயர்.

என்று பாடி அமைத்தனர் சேக்கிழார் பெருமானார். ஆனால், நம்பியாண்டார் நம்பிகள் அமர்நீதி நாயனார் வரலாற்றுக் குறிப்பினைப் பாடிய பாடலில், தராசுத் தட்டில் ஏறியவர்கள் அமர்நீதி நாயனாரும், அன்னார் மனைவியாரும் மட்டும்தான் என்பதை,

மீண்டும் பொழில்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிரான்தருநல் லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருள்என்று தன்பெருஞ் செல்வமும் தன்னையும்தன்
துண்ட மதிநுத லாளையும் ஈந்த தொழிலினனே.

என்று குறிப்பிட்டனர். திருத்தொண்டர் புராண சாரம் பாடிய உமாபதியார், ஈண்டு நம்பியாண்டார் நம்பிகள் போக்கில் தாம் போகாமல், சேக்கிழார் கருத்தின் போக்கினைத் தழுவி,

பழையாறை வணிகர்அமர் நீதி யார்பால்
பரவுசிறு முனிவடிவாய்ப் பயிலும் நல்லூர்க்
குழைகாதர் வந்தொருகோ வணத்தை வைத்துக்
கொடுத்ததனை எடுத்தொளித்துக் குளித்து வந்து
தொழிலாரும் அதுவேண்டி வெகுண்டு நீர்இத்
துலையிலிடும் கோவணநேர் தூக்கும் என்ன
எழிலாரும் பொன்மனைவி இளஞ்சேய் ஏற்றி
ஏறினார்வான் உலகுதொழ ஏறி னாரே.

என்று கூறியுள்ளார்.

இந்த ஒரு குறிப்புக்கொண்டே சேக்கிழார் பெருமானார் எதையும் நன்கு சிந்திக்காமலும் ஆராயாமலும் கூறுபவர் அல்லர் என்பதும், நம்பியாண்டார் நம்பிகள்

கருத்தினை அப்படியே தழுவிக்கொண்டு செல்பவர் அல்லர் என்பதும், தெற்றத் தெளிய நன்கு புலனு கின்றன அன்றோ? அந்த முறையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ள "பொய்யடிமை யில்லாத புலவர்க் கும் அடியேன்" என்ற அடிக்கு நம்பியாண்டார் கருதிய பொருளினைக் கருதாமல், அதாவது அவ்வடியில் குறிப் பிடப் பட்டவரை நம்பியாண்டார் நம்பிகள் எண்ணிய படி சங்கப்புலவர்கள் என்று கொள்ளாமல், தனியடியா ராகவே கொண்டுள்ளார் சேக்கிழார் என்று நாம் பின் னர், விளக்கமுற எடுத்துக்காட்டப்படும் காரணங்களைக் கொண்டு முடிவு கட்டலாம்!

## நம்பியாரூரரின் அறிவுத்திறன்

மேலும், ஆளுடைய நம்பிகள் "பொய்யடிமை இல் லாத புலவர்க்கும் அடியேன்" என்னும் அடியினை எம் முறையில் தனியடியாராகக் கருதினர் என்பதை நிலை நிறுத்த முற்படுவோமாக. நம்பியாரூரர் பழுத்த கல்வி அறிவுடையவர். இவரது கல்விப் புலமை கருதியே இறைவரும் இவரைத் தோழராகக் கொண்டனர் என்ப தைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் நால் வர் நான்மணி மாலை என்னும் நூலில்,

அறிந்து செல்வம் உடையானும் அளகைப்
பதியான் தோழமை கொண்டு
உறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் என இருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா நினைத்தோழமைகொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழும் நுதல்கண் பெருமானே.

என்று தெற்றத்தெளிய உணர்த்தியுள்ளார். சுந்தரர் நல்ல புலமைபெற்றவர் என்பதை நாம் அவர்தம் திருப் பாட்டில் நாள்தோறும் கண்டு இன்புறலாம். இதற்குச் சான்று இவர் பாடியுள்ள திருநாட்டுத்தொகை பதிகம் ஒன்றே போதுமானது. மிழலையம்பதி மிழலைநாட்டிலும் இருக்கின்றது. வெண்ணி நாட்டிலும் உள்ளது. எந்த நாட்டு மிழலை என்பதை எவரும் எளிதில் அறிய, 'மிழலை நாட்டு மிழலை, வெண்ணி நாட்டு மிழலை' என்று அப் பதிகத்தில் விதந்து ஓதியுள்ளதைக் காண்க.

## பொய்யடிமை இல்லாத புலவர் தனியடியாரே அன்றித் தொகையடியார் ஆகார்

இத்தகைய அறிவுசான்ற பெரியார் தனியடியார் களைக் குறிப்பிட்டுப் பாடிக்கொண்டு போகும் போக்கில், தொகையடியார் இனத்தைச் சார்ந்த ஒரு கூட்டத்தைத் தனித்துப் பிரித்துப் பாடி இணைப்பாரா? தொகையடி யார்க் கென்றே ஒரு பாடலைத் தனித்துப் பாடி அமைத் துள்ளாரே! "பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்" என்ற அடியினைக்கொண்ட திருப்பாட் டினைப் பார்த்தால், அப்பாடலில் அமைந்துள்ள அடி யார்கள் யாவரும் தனி அடியார்கள் என்பது புலப்படும்.

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க்கு அடியேன்
மெய்யடியன் நரசிங்க முனையரையர்க்கு அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க்கு அடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

என்பது அப்பாடல். இவ்வாறு இருக்கப் "பொய் யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்" என்னும் அடியில் உள்ள "புலவர்க்கும்" என்பது எங்ஙனம் தொகை யடியார்களைக் குறிக்கும்? இவ்வடிவில் உள்ள புலவர்க் கும் என்னும் மொழி தனியடியார்களைக் குறிப்பிடும் அடிகளோடு இணைந்திருப்பதனால், இவ்வடிவில் குறிப் பிடப்பட்ட பொய்யடிமை இல்லாத புலவர் தொகை யடியார் ஆவர் என்ற ஐயம் எங்ஙனம் எழும்? ஆகவே, பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் தனியடியாரே என்க. ஆளுடைய நம்பிகளது உள்ளக்கிடக்கையும் இதுவே என்க. ஆனால், ஈண்டு ஓர் ஆசங்கை எழக்கூடும். "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு அடியேன்" என்னும் அடி, தொகையடியார்களைக் குறிப்பதன்றோ? அவ்வடி தனியடியார்களைக் குறிப்பிட்டுப் பாடும் அடி களுடன் அன்றோ இணைந்து இருக்கிறது? எனவே, "பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்" என்னும் தொகையடியாரைக் குறிக்கும் அடி தனி யடியார்களைக் குறிப்பிடும் அடிகளில் இணைந்திருப்பதில் இழுக்கொன்றும் இல்லையே?" என்பதாம். இவ்வாறு ஐயம் எழுதல் இயல்பு. இதற்கு அமைதி கூறவேண்டு வதும் இன்றியமையாததே ஆகும். "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் அடி, ஆளுடைய நம்பிகளது வாக்கு அன்று. ஆரூர்த் தியாகேசர் அன்பு கூர்ந்து எடுத்துக் கூறிய அமுத வாக்காகும். அத னையே மகுடமாகக்கொண்டு ஏனைய அடிகளை அமைத்துத் திருப்பதிகத்தைப் பாடி முடித்தனர் பாவலராம் நம்பி யாரூரர். இதனை நயம்படத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும், தாம் பாடியருளிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ்க் காப்புப் பருவத்தில்,

"கார்கொண்ட சோலைசூழ் ஆரூரர், ஓர் அரைக்
காலநம்பி ஆரூரர்முக்
காலரைக் காலாக முடிவுசெய் தருள்மாக்
கவித்திசையில் வீற்றிருக்கும்
ஏர்கொண்ட தில்லைமூ வாயிரர்முன் வழுவரும்
எழுவரும் தழுவரும்எமது
இதயம் தழால்கொண்டு உறைந்திடச் செய்தவரை
எப்போதும் ஏத்தெடுப்பாம்"

என்று பாடி இருப்பதைப் படித்து இன்புறுவோமாக.

ஆகவே, இதுவரை கூறிய காரணங்களால் பொய் யடிமை இல்லாத புலவர் என்று சுந்தரரால் குறிப்பிடப் பட்டவர் தொகையடியார் அல்லர் என்பதும், தனி யடியாருள் ஒருவரே என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி யென உறுதியாயின. நம்பியாண்டார் நம்பிகளுடைய கருத்துப்படி சங்கப்புலவர்கள் பொய்யடிமை இல்லாத புலவர்கள் என்று கருதிவிட முடியாது. நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடும் சங்கப்புலவர்களுள் நக்கீரரும் ஒருவர் அல்லரோ ? அந் நக்கீரர் இறைவனேரே புலவர் வேடங் கொண்டு சங்கம் போந்து தாம் இறைவர் என்பதை உணர்த்த நெற்றிக் கண்ணையும், சடை முடியினையும் காட்டியபோதும், அவர் எதிர்த்த நிலையினைத் திருக் காளத்திப் புராணம் குறிப்பிடுங்கால்,

ஏற்றினன் நெற்றிக் கண்ணும் எரிமருள் சடையும் காட்ட
மாற்றரும் மருட்சியான்கண் வடிவெலாம் காட்டி னாலும்
சாற்றிய செய்யுள் குற்றம் சடைகொண்டு வெருட்டல் வேண்டா
தோற்றிலன் இதனுக்கு என்றான் தொலைவிலான் வெகுண்டு
[சொல்வான்

என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு இறைவரையே எதிர்த் துப் பேசும் நக்கீரர் உள்ளிட்ட சங்கப் புலவர்களைப்

"பொய்யடிமை இல்லாத புலவர்" என்று கூறமுடியுமா என்பதை நாம் சிறிது சிந்திக்கவேண்டும் அன்றோ? "பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோலச் சிவநேசச் செல்வரெனக் கருதக்கூடிய நக்கீரர் ஒருவரது இயல்பைக் கூறிவிட்ட பிறகு, மற்றுமுள்ள புலவர்கள் இயல்பைக் கூறவும் வேண்டுமோ? வேண்டா அன்றே? இந்தக் காரணத்தாலும் அரன் அன்பும், அடியார் அன்பும் விஞ்சி நிற்கும் குழுவில் சங்கப் புலவர்கள் முற்றும் இணைந்து நிற்பவர் அல்லர் என்பதையும் ஈண்டே யூகித்து உணரலாம். மேலும், சங்கப் புலவர் களில் சிவநெறியினரே அன்றிப் பிறநெறியினரும் இருந்தமை எவரும் அறிவர். சங்கப்புலவர் குழுவில் திருமால் நெறியினரும் சமண பௌத்த சமயத்தினரும் இணைந்து இருந்தனர் என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது.

"அற்றாயின், பொய்யடிமை இல்லாத புலவர் என்பவர் தனியடியாராயின், அன்னார் யாவர்? யாரைக் குறிப் பிட்டுச் சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் "பொய்யடிமையில்லாத புலவர்" என்று குறிப்பிட் டுள்ளார்?" என்று வினவக் கூடும். அவ்வினாவுக்கும் விடை ஈண்டே காண்போமாக. பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் ஈண்டுத் திருவாசகம் என்னும் தேனைப் பொழிந்த மணிமொழியாரே என்க. இவரே பொய் யடிமை இல்லாத மெய்யடிமையுடைய புலவராவார். இதற்குரிய விளக்கத்தினைப் பின்னர்ப் பரக்கக் காண லாம்.

இங்கும் ஓர் ஆசங்கை எழக்கூடும். அது "மாணிக்க வாசகனார் மூவர் முதலிகளான அப்பர், சுந்தரர், சம் பந்தர் ஆகிய மூவர்க்கும் பிற்பட்டவர் என்ற கொள்கை

இருக்கின்றபோது, நம்பி ஆரூர் மாணிக்கவாசகரைத் தான் "பொய்யடிமை இல்லாத புலவர்" என்று குறிப்பிட்டுள்ளார் என்று எவ்வாறு கூற இயலும்?" என்பது. திருவாதவூரர் பிற்பட்டவர் என்ற கொள்கை இருப்பதுபோலவே அன்னார் மூவர்க்கும் முற்பட்டவர் என்ற கொள்கையே, ஆணித்தரமான அகப்புறச் சான்று களால் நிலை நிறுத்தப்படுகிறது. முதற்கண் மணிமொழி யார் மூவர்க்கும் பிற்பட்டவர் என்று கூறுவார் காட்டும் காரணங்களை நன்கு அலசி, அவ்வாறு காட்டப்பட்டவை அத்துணைப் பொருத்தமுடையனவகாக் காணப்பட வில்லை என்பதை என் சிற்றறிவுக்கெட்டிய வரையில் எடுத்துக் கூறிப் பின்னர் முற்பட்டவர் என்ற கொள்கை யினையும் நிலை நிறுத்த ஒல்லும் வகையால் முயல்வேனாக.

## மாணிக்கவாசகர் மூவருக்கும் பிற்பட்டவர் என்று கூறுவார் கூற்றுக்களும் அவற்றிற்குரிய மறுப்புக்களும்

திருவாசகக் கீர்த்தித் திருவகவலில் எண்பத் தொன்பதாவது அடியாகிய கழுமலமதனில் காட்சி கொடுத்தும்" என்னும் அடியினைக் காட்டி, "இக் குறிப்பு, இறைவர் திருஞானசம்பந்தருக்குப் பிரம்ம தீர்த்தக் கரையில் காட்சி கொடுத்த நிகழ்ச்சியினைக் குறிப்பதாகும்" என்பர் ஒரு சிலர். ஆனால், இங்குக் கூறப்பட்ட "காட்சி கொடுத்தும்" என்பதனை ஞானசம் பந்தருக்குக் காட்சி கொடுத்தது என்று எவ்வாறு நாம் கொள்ள இயலும்? இறைவன் ஆங்காங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி, அன்பர்கள் யாவர்க்கும் காட்சி கொடுக்கும் இயல்பினன் என்பதே நாம் அறிந்த உண்மை யாகும். ஆகவே, இத் தொடர் சீர்காழிப்பதியில் இறை வன் வீற்றிருந்து அன்பர்கட்குக் காட்சி கொடுப்பவர்

என்று உண்மைப் பொருளைக் குறிப்பதாகும். இத்துடன் மணிமொழியார் திருவாசகத்தில் பாடியுள்ள பிடித்த பத்தின் தலைப்பில் "திருத்தோணிபுரத்தில் அருளிய பிடித்த பத்து" என்று குறிப்பிடப்பட்டிருத்தலினைக் காணலாம். மணிமொழியார் தாம் சீர்காழிக்குச் சென்று இறைவன் காட்சியைக் கண்ட பிறகு, இக் கீர்த்தித் திருவகவல் பாடப்பட்டதாகக் கருத்தில் கொள்ள வேண்டி இருத்தலின், அக்காட்சியினை வியந்து "கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்" என்று இயம்பி இருக்கிறார் என்பது பெறப்படும். இவ்வாறு இவரே இறைவனார் தமக்குக் காட்சியளித்ததை இப் பிடித்தபத்து ஆறாவது பாடலில் "இறவிலே கண்ட காட்சியே" என்று குறிப்பிட்டிருப்பதையும் நாம் அறிதல்வேண்டும். உண்மையில் "கழுமலம் அதனில் காட்சிகொடுத்தும்" என்னும் தொடரில் காணப்படுவது திருஞானசம்பந்தர்க்கு இறைவர் அளித்த காட்சியே ஆகும் என்பதானால், திருஞானசம்பந்தர் பிறந்த பதியும், ஞானப் பால் உண்டு ஞானம்பெற்ற பதியும் ஆகிய அக்கழுமலப் பதியில் சென்று பாடிய மணிவாசகப் பெருமானார், தம் பிடித்தபத்தில் யாண்டேனும் ஒரு செய்யுளில் ஞானசம்பந்தரது அருமைப்பாட்டில் ஒன்றேனும் குறிப்பிட்டிருக்க மாட்டாரோ? பல அருஞ்செயல்களைக் குறிப்பிடாமல் போயினும், ஞானப்பால் உண்டதனையோ, அன்றி உண்பித்ததனையோ உரைத்திருக்க மாட்டாரோ? இங்கு உணர்த்தாத இக் குறிப்பினைக் கீர்த்தித் திருவகவலில் சென்றுதானா உணர்த்த வேண்டும்? ஆகவே, "கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்" என்பதில் குறிக்கப்பெறும் குறிப்பு அன்பர்கட்கு ஆண்டவன் அளிக்கும் பொதுக்காட்சியாக

வேணும், அன்றி மணிமொழியார்க்குக் காட்டிய சிறப்புக் காட்சியாகவேணும் இருக்கவேண்டுமேழியத் திருஞான சம்பந்தர்க்குக் கொடுத்த காட்சி ஆகாது.

மேலும், இத்தொடர்க்குக் காழி தாண்டவராயர் தமது வியாக்கியானத்தில், "திருக்கழுமலமான தலத்திலே பிரணவத் திருத்தோணிமேல் எழுந்தருளி மூவுருவும் ஓருருவெனச் சகல பக்குவ தேவர் அடியார்க்குப் பரம குருவாய் ஒன்றாகக் கண்ணில் இன்புறக் காட்சி அருளும் பெருங் கருணையை அன்பால் காண்க" என்று விளக்கியுள்ளார். அவரும் திருஞானசம்பந்தரைப் பற்றிய எந்தவிதமான குறிப்பினையும் குறிப்பிடாததைக் கவனித்தல் வேண்டும்.

திருவாசக உயிருண்ணிப்பத்தின் முதற் செய்யுளில் உள்ள "செந்நாவலர் பரசும்புகழ் திருப்பெருந்துறை உறைவாய்" என்ற அடியினைக் காட்டி, "இங்குச் செந்நாவலர் என்பார் திருநெறித் தேவாரம் அருளிச்செய்த மூவர் முதலிகளே" என்று கருதுகின்றனர் பல அன்பர்கள். செந்நாவலர் என்பார் எங்ஙனம் மூவர் முதலிகளைத் தான் குறிக்குமோ தெரியவில்லை. இத்தொடரின் பொருள் செம்மையான நா வன்மை படைத்த—அதாவது பேசுந் திறன், பாடுந்திறன் படைத்த—பெருமக்கள் என்று கருதப் படுமே அன்றித் தேவாரம் அருளிய பெரியார்கள்தாம் என்பது பெறப்படாது. "அன்று அன்று. நாவலர் என்பார் நாவுக்கரசராய அப்பர் பெருமானார். அவரே நாவுக்கரசர் என்றும் சிறப்புப் பெயர் பெற்றவர். ஆகவே, அவரையே மணிமொழியார் இங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்." என்று கூறக் கூடும். நாவலர் திருநாவுக்கரசர் என்றால், அத் திருநாவுக்கரசர் மணிமொழியார் பொருட்டு இறைவர் நரியைப் பரிகளாக்கிய அற்புதத்தைக் குறிப்பிட்டுத் தாம் மணிமொழியார்க்குப் பிற்பட்டவர் என்பதை நாம்

அறியச் செய்திருக்கும்போது, நாவலர் மணிமொழியார்க்கும் முந்தியவர் என்பதை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள இயலும்? "அன்று, அன்று. நாவலர் என்பார் திருநாவலூரராகிய சுந்தரரைக் குறிப்பதாகும்" என்று கூற முற்படுவாராயின், கி. பி. ஏழாம் நூற்றாண்டு தொடக்கத்துப் பெரியாராகிய அப்பர் பெருமானையே நாவலர் என்னும் மொழி குறிப்பிடாது என்று அறிந்த பின், கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த சுந்தரரை நாவலர் என்னும் சொல் குறிக்கும் என யாங்ஙனம் ஏற்கமுடியும்? மேலும், செந்நாவலர் என்பதற்குக் காழி தாண்டவராயர், "திருவருள் ஞானம் பெற்றோர்" என உரை கூறியதைக் காண்க. ஆகவே, செந்நாவலர் என்பார் ஈண்டு மூவர் முதலிகளாகக் கருதப்படாமல், நல்ல நாவன்மை படைத்த திருவருள் பெற்ற அன்பர்களேயாவர் என்று நாம் கருதுவோமாக.

திருவாசகத்தின் திருவம்மானையில் எட்டாவது பாடலில் காணப்படும் 'பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்' என்னும் அடியினைக் காட்டிப் "பண் அமைப்பினைப் பெற்ற தேவாரப் பாடல்களுக்குப் பரிசு தந்தருளும்" என்ற பொருளைக் காண்கின்றனர்: 'பண் சுமந்த பாடல்' என்னும் தொடரில் உள்ள பண்சுமந்த என்பது பாடற்கு அமைந்த அடைமொழியே அன்றித் தேவாரப் பதிகங்களைக் குறிப்பதற்காக அமைந்த அடைமொழி யன்று. பாடற்குரிய சிறப்பியல்புகள் பலவற்றுள் பண்ணுடன் பொருந்துவதும் ஒன்றாகும்; பாடற்கும் பண்ணிற்கும் இருக்கும் இயற்கைப் பொருத்தத்தை,

> **பண்என்னும் பாடற் கியைபின்றேல்? கண்என்னும்**
> **கண்ணோட்டம் இல்லாத கண்**

என்று வள்ளுவப் பெருந்தகையார் வாய்மொழியாலும் நன்குணரலாம். பண் என்ற சொல்லைக் கண்டவுடன் அப்பண் தேவாரப் பதிகங்கட்கே உரியது என்று கருதிவிடமுடியாது. சங்க நூலாகிய பரிபாடலில் காணப் படும் பாடல்கள் பண் அமைந்த பாடல்களேயாகும். இரண்டு முதல் பதின்மூன்றுவரையுள்ள பாடல்களின் பண், பாலையாழ் என்றும், பதினான்கு முதல் பதினேழு வரையுள்ள பாடல்களின் பண், திறம் என்றும், பதி னெட்டு முதல் இருபத்தொன்றுவதுவரையுள்ள பாடல் களின் பண், காந்தாரம் என்றும் குறிப்பிடப்பட்டிருப் பதைக் காண்க. அப்பாடல்களுள் சில திருமால்மீதும், செவ்வேள் பரமன்மீதும் பாடப்பட்ட பாடல்கள். ஆகவே, இயல்பாக இறைவர் பண்பாடும் அடியவர்கள் எவர்க்கும் பரிசு தருபவர் என்பதே அவ்வடியின் பொரு ளாகும். இதனைத் தேவார ஆசிரியரே கூறியிருக்கின் றனர்.

> 'பண்ணொன்ற இசைபாடும் அடியவர்கள் குடியாக
> மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்'

என்ற திருஞானசம்பந்தர் வாக்கை அறிவோமாக.

"பண்சுமந்த பாடல்" என்னும் தொடருக்குக் காழி தாண்டவராயர், "திருவருள் இசையுடைய திருவருள் பாதத்துக்கு" என உரை கூறினரே அன்றிப் பண்ண மைந்த தேவாரப் பாடல்களுக்கு என்று பொருள் எழுதாமையை உற்றுக் கவனித்தல்வேண்டும்."

திருவாசகத் திருச்சதகத்தில் ஆனந்த பரவசம் என் னும் தலைப்பின்கீழ் உள்ள ஒன்பதாவது பாடலில்,

> " பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
> அணியார் பாதம் கொடுத்தி "

என்பதைக்காட்டி, 'ஈண்டுப் பிணிதீர்த்தருளி' என்பதற்கு, "அப்பர் பெருமானுக்கு இருந்த சூலை நோயைத் தீர்த்த குறிப்பு" என்று உரை காண்கின்றனர். "பிணி தீர்த்தருளி" என்பது நக்கீரர்க்கு உண்டான குட்ட நோயை நீக்கியருளி என்று பொருள் காணவும் துணை செய்யும் என்று ஏன் கொள்ளுதல் கூடாது? அதோடு "பிணி தீர்த்தருளி" என்னும் தொடர்க்கு முன்னுள்ள "பணிவார்" என்னும் சொல் அமைந்து இருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அச் சொல்லையும் சேர்த்துப் பொருள் காணும்போது "இறைவனை வணங்குபவர்களுடைய நோயைப் போக்கியருளி" என்று பொதுப்படக் கூறியதாக ஏன் பொருள் கூறுதல் கூடாது? ஆகவே, "பிணி தீர்த்தருளி" என்பது அப்பர் பெருமானுக்குற்ற சூலைநோய் நீக்கிய செயலை அன்று. வணங்குவார் நோயைத் தீர்த்தருளி என்பதே பொருள். இப்படிக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். ஈண்டுக் கூறப்பட்ட பிணி என்பதற்குப் "பிறவிப்பிணி" எனப் பொருள் கண்டார் காழி தாண்டவராயர்.

திருவாசகத் திருவெம்பாவை என்னும் பகுதியின் பத்தாவது பாடலில் வரும், "ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்" என்பதனைக் காட்டி, "இறைவனுக்குத் தொண்டர் குழாத்துள் சுந்தரமூர்த்திகளாகிய ஒப்பற்ற தோழன் ஒருவன் உளன்" என்று அவ்வடிக்குப் பொருளும் உரைக்க முன்வருகின்றனர். இச்செய்யுள் செல்லும் பொருள் ஓட்டத்தைக் கண்டால், "ஒரு தோழன் தொண்டருளன்" என்ற தொடரில் தொண்டர்களுக்குள் ஒருதோழன் இறைவனுக்கு உள்ளான் என்ற பொருள் தோன்றப் பெறுமல், இறைவன், தன்னைய நம்பித் தொழுவார்க்கு ஒப்பற்ற துணைவன் ஆவான்

என்ற பொருளும், தொண்டர்களின் உள்ளத்தில் இருப்பவன் என்ற பொருளும் பெறப்படுதலைக் காணலாம். இத்தொடருக்கு மற்றொரு பொருளும் கூறப்படும். அதுபோது தோழன் என்பதைத் தோழம் எனக் கொள்ளல்வேண்டும். அதாவது, தோழம் என்பது ஒரு பேர் எண்ணிக்கையைக் குறிக்கும் சொல்லாதலின், அப் பொருளைக்கொண்டு காணும்போது, சொல்லச் சொல்லக் குறையாத ஒப்பற்ற பேர் எண்ணிக்கைக்கும் மேற்பட்ட பல தொண்டர்களைப் பெற்ற இறைவன் என்பது. ஆகவே, தோழன் தொண்டருளன் என்பது சுந்தரரைக் குறிக்க இடம் இல்லை என்க.

திருவாசகத்தில் கீர்த்தித்திருவகவலில் வரும் எழுபத்து மூன்று எழுபத்து நான்காம் அடிகளாகிய

'தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானம் தன்னை நல்கிய நன்மையும்'

என்றவற்றைக் காட்டிச் சிவபெருமான் ஆளுடைய நம்பிகளாம் சுந்தரமூர்த்திகளுக்குத் திருவாரூரில் ஞானம் அளித்த செயலைக் குறிப்பதாகும் என்பர். இறைவர் சுநதரருக்குத் திருவாரூரில் பரவை நாச்சியாரை அளித்தார்; இல்லறம் நடத்த இனிய பல உதவிகள் புரிந்தார் என்று அறிந்துள்ளோமே அன்றி, ஈண்டு நம்பியாரூரர்க்கு ஞானம் அளித்தார் என்று நாம் உணர்ந்தோம் இல்லை. உண்மையில் சுந்தரருக்கு ஞானம் நல்கிய இடம் திருவதிகை வீரட்டானம் என்று வேண்டுமானால் நாம் கூறலாம். ஆண்டுத்தான் இறைவர் இவர் தலையில் திருவடியைச் சூட்டி அருளியுள்ளார். இது ஞானோபதேசத்தின்போது செய்யப்படும் திருவடி தீட்சை போன்றதன்றோ? மேலும், ஆண்டு இறைவர்

இவர்க்கு ஞான உணர்ச்சியினை ஊட்டியருளினார் என்பதற்குச் சான்றாகத் திருவதிகைவீரட்டானத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியையே நன்கனம் சான்றாக அமையும். அங்குத்தான் இறைவர் ஒருநாள் இரவு, சுந்தரர் திருமுடியில் தம் திருவடியினைச் சூட்டி அருள் செய்துள்ளார். இறைவர்தாம் திருவடி சூட்டினர் என்பதை உணராத நிலையில் நம்பி ஆரூரர் 'நீர் யார்' என்று வினவியபோது "என்னை அறியாயோ?" என்று கூறி இறைவர் மறைந்தவுடன், வந்தவர் இறைவர் என்பதை உணர்ந்த சுந்தரர்,

> செம்மாந்திங் கியான் அறியா தென்செய்தேன் எனத்தெளிந்து
> தம்மானை அறியாத சாதியார் உளரேஎன்
> றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
> கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினார்.

என்ற பெரிய புராணம், கூறுதல் கொண்டும்,

> தம்மானை அறியாத சாதியா ருளரே
> சடைமேல்கொள் பிறையானை விடைமேல்கொள் விகிர்தன்
> கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
> உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
> தெம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடும்
> ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன் [என்னும்
> எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
> துறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.

என்று சுந்தரர் பாடுதல் கொண்டும் நன்கு உரைலாம். மேலும், சுந்தரர் திருத்துறையூர் தேவாரத்தில் தமக்குத் தவநெறி தந்தருளுமாறு கேட்டலின், ஒருவேளை அங்கு ஞானம் பெற்றார் என்றுகூடக் கருதலாம். ஞானம் பெறுதற்குத் தவநெறி துணையாகும் அன்றோ?

மத்தம் மதயானையின்வெண் மருப்புந்தி
முத்தம் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பாவும் துறையூர்
அத்தா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே

என்பது சுந்தரர் திருப்பாடல். இதன் கருத்தையே,

புலன்ஒன்றும் படிதவத்தில் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவும்தண் புனலும்ஒளிர் நீள்சடையோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்திந்தார் வன்தொண்டர்

என்று பெரியபுராணம் கூறுகிறது. ஆகவே, திருவாரூரில் சுந்தரர் ஞானம் பெற்றார் என்று கூறுதற்குச் சான்றில்லை என்க.

திருமுறை வகுப்பில் எட்டாவது திருமுறையாகத் திருவாசகம் இருத்தலின், திருவாசக ஆசிரியர் மூவர்க்கும் பிற்பட்டவராக இருக்கவேண்டும் என்றும் கூறுவர். திருமுறை வகுப்பு, காலம் கருதி வகுக்கப்பட்டதன்று. காலம் கருதி வகுக்கப்பட்டிருப்பின், மூவர்க்கும் முற்பட்ட காரைக்கால் அம்மையார் திருப்பதிகம் முதல் திருமுறையாக இருத்தல்வேண்டும். இவ்வாறு இருக்கத் தகுதியுடையது என்பதற்குச் சான்றாக, அது மூத்த திருப்பதிகம் என்ற பெயரையும் தன் தலைப்பில் பெற்றுள்ளதைக் கொண்டே கூறலாம். அப்படி இருந்தும் அது பதினோராம் திருமுறையில் அமைந்துள்ளது. மேலும், திருநாவுக்கரசர் ஞானசம்பந்தர் காலத்தவராயினும், அவர் பாடிய தேவாரமே முதலாவது தேவாரம் ஆகும். அவ்வாறு முதலில் பாடிய தேவாரத்தையும் முதற்கண் அமைத்திலர் திருமுறை வகுத்த பெரியார். ஆகவே, திருமுறையின் வைப்பு முறைகளைக்கொண்டு

மாணிக்கவாசகர் மூவர் முதலிகட்கும் பிற்பட்டவர் என்று கூற இயலாது.

மணிமொழியார் பாடிய திருக்கோவையாரில் வர குணனைப் பற்றிய குறிப்பு வருகின்றது. அவையே,

மன்னவன் தெம்முனைமேல் செல்லும் ஆயினும் மாலரியே
றன்னவன் தேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனும்
தென்னவன் ஏத்துசிற் றம்பலத் தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் நாளும்மற் றோர்தெய்வம் முன்னலனே

புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமும் காட்டிவரும்
செயலோங் கெயில்எரி செய்தபின் இன்றோர் திருமுகமே.

என்பன.

இங்குவந்துள்ள வரகுணபாண்டியனைக் காட்டி, இவன் 9-ஆம் நூற்றாண்டினன் என்று கூறியும், ஏத்து சிற்றம்பலம் என்றும், சிற்றம்பலம் புகழும் என்றும் இங்குப் பாடப்பட்டிருத்தலின், தம் காலத்தில் அவன் இருந்து புகழும் நிகழ்காலச் செயலாகக் குறிப்பிட்டிருக் கின்றனர் என்று காட்டியும் மணிமொழியார் 9-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்தவர் என்று கூற முன்வருவார். இங்குக் கூறப்பட்ட வரகுணன், ஒன்பதாம் நூற்றாண்டு வரகுணன் அல்லன். இங்குக் கூறப்பட்டவன் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவனாவான். இதனை மறை மலையடிகளார் தக்க சான்றுகொண்டு நிறுவியதை அவர் எழுதிய மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி என்னும் நூலில் கண்டு தெளிவோமாக.

மற்றும் சிலர், திருவாசகத்தில் பண்டைத் தொண்ட ரோமே என்பது யாத்திரைப் பத்தில் வருதல் கொண்டு,

ஈண்டுப் பண்டைத் தொண்டராவார் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றார் என்று பொருள் கண்டு, மணிமொழியார் அம்மூவர்க்கும் பின்ன வர் என்று சாதிக்க முன்வருவர். பண்டைத் தொண் டர்கள் அவர்களாயின், மணிமொழியார் அவர்களை வெளிப்படையாகக் குறிப்பிடுதல் வேண்டும். அங்ஙனம் அம்மூவர் பெருமக்களைக் குறிப்பிடாமல், தம் நூலகத்து மூவர் முதலிகளாலும் மற்றும் உள்ளவர்களாலும் பாராட்டப்படும் பழம் பெரும் தொண்டர்களாகிய கண்ணப்ப நாயனாரையும் சண்டேசுரரையும் குறிப் பிட்டுப் பாடியுள்ளார்.

இதனைக் கீழ்வரும் திருவாசகப் பாடல்களைக் கொண்டு அறியலாம்.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ

என்ற பாடலில் கண்ணப்ப நாயனாரையும்,

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்

என்ற பாடலில் சண்டேசுர நாயனாரையும் குறிப்பிட் டிருப்பதைக் காண்க.

அவ்விருவர்களையும் அவர்களுக்கு முன்னிருந்த அடி யவர்களையும் சுட்டிப் பண்டைத் தொண்டரொடும் என்று கூறியருளினர் என்பதே அத்தொண்டர் என்னும் சொல்லுக்குரிய பொருளாகும். அப்பொருளுடன்,

கீளூர் புலித்தோல் உடைத்தலைவன் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடி
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானடர் கோவும் வழிபடியார் சாழலோ

என்று மணிமொழியார் குறிப்பிட்டுப் பேசுதலினின்று அரி, அயன், அமரர்கோன் ஆகிய பழ அடியார்களைக் குறிப்பிட்டுக் கூறினர் என்பதனையும் பொருளாகக் காணலாம். இத்துடன், இறைவன் குருந்த மரத்தடியில், மணிமொழியாரை ஆட்கொள்ளத் தம்மைச் சூழ அடியார் கூட்டத்துடன் இருந்த நிலைகண்ட மணிமொழியார், அவ்வடியவர்களைப் பண்டைத் தொண்டரொடும் என்றனர் என்றும் கருதி, இவ்வாறு பாடினர் என்று கொள்ளலாம். அவர்களை நினைந்து நினைந்து, பல இடங்களில் பாடியுள்ளார்.

சென்னிப் பத்தில்,

அறவை என்றடி யார்கள் தங்கள்
அருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்தெனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்

என்றும், அற்புதப் பத்தில்,

ஆசை தீர்த்தடி யார்அடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே!

என்றும், பிரார்த்தனைப் பத்தில்,

கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்திருந்தேன்

என்றும் பாடிப் பரவசமுற்றமைதப் பரக்கக் காண்போமாக.

ஒருசிலர் திருவாசகத்தில்,

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

என்றும்,

ஆகமமாகி அண்ணிப்பான் காண்க

என்றும்,

"மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்"

என்றும், ஆகமத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது போலத் தேவாரத் திருமுறைகளில் குறிப்பிடாமையின், தேவார ஆசிரியர் காலத்துக்கு மணிமொழியார் பின்னவர் என்று கூற முன் வருவர்.

தேவார திருமுறைகளில் ஆகமத்தைப் பற்றிய குறிப்பு இன்று எனக் கூற இயலாது.

ஆளுடைய பிள்ளையார்,

ஆகமத்தோடு மந்திரங்கள் அமைந்த சங்கதம்

என்றும்,

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்

என்றும்,

"ஆகமச் செல்வனாரை!"

என்றும், அப்பர் பெருமானார்,

இணையி லாஇடை மாமரு தில்எழு
பணையி லாகமம் சொல்லித்தன் பாங்கிக்கே

என்றும்,

அண்டனை அண்டர்தமக் காகம
நூல்மொழியும் ஆதியை

என்றும், ஆளுடைய நம்பிகள்,

" அம்மானே ஆகமசீலர்க் கருள்நல்கும் பெம்மானே"

என்றும்,

அரவொலி ஆகமங்கள் அறிவார் அறிதோத்திரங்கள்

என்றும் குறிப்பிட்டிருப்பதிலிருந்து மூவர் முதலிகளும் ஆகமக்குறிப்பினைக் கூறியுள்ளார் என அறிவோமாக.

ஆகமத்தைப் பற்றிய குறிப்பு அனாதியாகிய வேதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஸர்வாகம மயஸ் ஸிவ:" என்பது அவ்வேத வாக்காகும் என, வடமொழி அறிந்தவர் எடுத்துக்காட்டுகின்றனர். வேதமே ஆகமத்தைப் போற்றிக் குறிப்பிடும்போது, அவ்வேத வழிநின்றும் ஆகம வழிநின்றும் இறைவனை வழிபட்ட மெய்யடியார் குறிப்பிடாமல் செல்வரோ? ஆகவே, வேதத்தைப் போல ஆகமமும் அனாதி என்க. ஆகமம் வேதத்திற்குப் பிற்பட்டது என்பதும், அப்பிற்பட்டதை மணிமொழியார் குறிப்பிட்டதனால் அவர் மூவர் முதலிகளுக்கும் பிற்பட்டவர் என்று கருதுவதும் கூடாது.

திருவாசகத்தில் பாசத்தைப் பற்றியும், பாசத்தின் பிரிவாகிய மும்மலங்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கூறி, அதற்குச் சான்றாக,

" பல்லோரும் காணஎந்தன் பசுபாசம் அறுத்தானை"

என்பதையும்,

" மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்"

என்பதையும் காட்டி, இத்தகைய குறிப்புக்கள் தேவாரத்தில் காண்டற்கில்லாமையின், மணிமொழியார் மூவர் முதலிகட்குப் பிற்பட்டவர்தாம் என்று கூறவும் முன் வருவர். தேவாரத்தில் பாசத்தைப் பற்றியும் மும்மலங்களைப் பற்றியும் குறிப்புக்கள் காணப்படவில்லை என்று

கூற முடியாது. திருஞான சம்பந்தருடைய தேவா ரத்தில்,

> விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
> டளையாயின தவிர அருள் தலைவன்னது சார்பாம்

என்றும்,

> மலனோடு மாசும் இல்லவர் வாழும்
> மல்குபெருந்துறை யாரே

என்றும் குறிப்பிட்டிருப்பதைக் காணும்போது, தேவா ரத்தில் மும்மலங்களைப் பற்றிய குறிப்பு இன்றெனக் கூற் இயலாது.

திருமூலர் திருஞான சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பது அறிஞர்களின் துணிபு. அத்திருமூலர் தம் திருமந்திரத்தில்,

> பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
> பதியினைப் போல்பசு பாசம் அநாதி
> பதியினைச் சென்று அணுகாப்பசு பாசம்
> பதியணு கில்பசு பாசம் நிலாவே

என்று குறிப்பிடப்பட்டதிலிருந்து தேவார காலத்துக்கு முன்பே பாசத்தைப் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது என்பதை உணரலாம். திருமூலர் திருவாக்கில் பாசமும் இறைவனைப் போல் அநாதி என்று குறிப்பிட்டிருப்பதை ஆழச் சிந்திக்கின், பாசத்தைப் பற்றிப் பிற்பட்டவர்களே குறித்திருக்கின்றனர் என்று கூறுவார் கூற்றுக்கு ஆதாரம் இல்லாமற் போதலை நாம் சிந்திக்கவேண்டியவ ராகின்றோம்.

இவ்வாறு சில காரணங்களைக் காட்டி மாணிக்க வாசகர் மூவர்க்கும் பிற்பட்டவர் என்பதை நிலைநாட்ட

முற்படுவர். இவ்வாறு காட்டப்படும் காரணங்கள் காரணங்கள் ஆகா என்று ஒருவாறு இதுவரைக் காட்டினன். அடுத்தது முற்பட்டவர் என்பதற்குரிய காரணங்களைக் காட்ட முற்படுவேனாக.

## மணிமொழியார் மூவர் முதலிகளுக்கும் முற்பட்டவர் என்பதற்குரிய காரணங்கள்

சங்ககால நூல்களில் விநாயகரைப் பற்றிய பேச்சே இல்லை. பிள்ளையார் என்பவர் முருகப்பெருமானே யாவார். சங்ககாலத்தில் விநாயகர் இருந்திருப்பாரானால், சங்கநூற்களின் கடவுள் வாழ்த்துக்களில் ஒன்றிலாவது காணப்படுதல் வேண்டும். அப்படிக் காணுதற்கு இல்லை. அறிஞர்களாகிய திரு. திருமலைக் கொழுந்துப் பிள்ளை, பொன்னம்பலப் பிள்ளை, கே. ஜி. சேஷய்யர், மறைமலை அடிகளார் டாக்டர் - உ. வே. சுவாமிநாத ஐயர் போன்றவர்கள் மணிமொழியார்கி. பி. மூன்றும் நான்காம் நூற்றுண்டினர் என்று கருதுவதனால், சங்க காலத்தை அடுத்து எழுந்த திருவாசகத்தில் பிள்ளையாரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் அறிதல் வேண்டும்.

உன்னை உகப்பன் குயிலே உன் துணைத் தோழியும் ஆவன
பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்

என்னும் திருவாசகப் பாடலில், முடியுடை மூவேந்தர்களைப் பற்றிய குறிப்புப் பெறப்படுகின்றதே அன்றிப் பல்லவரைப்பற்றிய குறிப்புக் காணப்பட்டிலது.

சங்ககாலத்திலும் பல்லவர்களைப் பற்றி அறிந்து கொள்ளற்கு இன்மையின், அதற்குப் பின்வந்த திருவாச

கத்தில் அவர்களைப் பற்றிக் குறிப்பிட ஏது இல்லாமல் போயிற்று.

இத்துடன் "கலையார் அரிகே சரியாய் போற்றி" என்னும் போற்றித்திருவகவலில் வரும் அடியினைக் காட்டி, ஈண்டு அரிகேசரி என்பது ஒரு தலத்தின் பெயர். அத்தலம் அரிகேசரி மாறவர்மன் என்ற பாண்டிய மன்னனால் உண்டாக்கப்பட்டது. அம் மன்னன் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு ஆதலின், அவன் காலத்திய கோயிலில் உள்ள இறைவனை என்ற குறிப்பில் அரிகேசரி யாய் என்று போற்றினர் என்று காட்டி, மணிமொழியார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்பதை நிலைநாட்ட முற்படுவார். ஆனால், அரிகேசரியாய் என்ப தற்கு அரிகேசரி என்னும் பாண்டி மன்னனால் இயற்றப் பட்ட கோயிலில் உள்ளவனே என்பது பொருள் அன்று என்பது, காழி தாண்டவராயர் எழுதிய திருவாசக வியாக் கியானம் என்னும் உரை நூலால் நன்கு விளங்குகிறது. அவ்வுரையில், "பிரகலாதன் அன்புக்காக இரணியனைக் கொல்லத் தூணின்கண் வந்த நரசிம்மாவதார மகா விட்டுணு, இரத்த உன்மத்த வெறியால் மேலொரு கடவுள் இல்லை எனச் சிவனை மறந்த மயக்கத்தை நிக்கிரகம் செய்யும் பொருட்டுக் கேசரியாக எழுந்தருளிய நாதனே உன் அடிமையை இரட்சிக்க" என்று எழுதப் பட்டதைக் காணும்போது, அரிகேசரி என்பது ஓர் ஊரின் பெயர் அன்று என்பது பெறப்படுகிறது. அரி கேசரி என்பது ஓர் ஊரின் பெயர் என்ற நினைவே காழி தாண்டவராயருக்கு வராமையை ஈண்டு நாம் கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

இவ்வாறு இருப்பதை உணர்ந்தும், "அரிகேசரியாய்" என்பது பல தலங்களைக் குறிப்பிட்டுவரும் போக்கில்

மணிமொழி கூறிக்கொண்டு வருதலின், அரிகேசரி என்பது தலமே அன்றி வேறன்று" என்று சாதிக்க முன்வரலாம். மணிமொழியாருக்குத் தலங்களைக் குறிப்பிட வேண்டும் என்ற நோக்கம் இருப்பின், தாம் கூறக் கருதிய தலங்கள் யாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக ஓரே இடத்தில் பாடிச் சென்றிருப்பர். அங்ஙனம் இன்றிப் பற்பல இடங்களில் தம் உள்ளம் சென்ற நிலையில் தலங்களைக் குறிப்பிட்டுப் பாடிப்போதலின், தலங்களை ஒருங்கே கூற மனம் கொண்டிலர் என்பதும் தெரியவருகிறது. இதனைப் பின்வரும் அடிகளைக் காட்டியும் நன்கு நிறுவலாம்.

> பாய்த்துறை மேவிய பரனே போற்றி
> சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

என்று திருத்தலங்களைக் குறித்துப் போற்றி, உடனே "மற்றோர் பற்றிங்கறியேன் போற்றி" என்று பாடிக்கொண்டு செல்கின்றமையின், தலங்களை ஒரே தொடர்பில் பாடவேண்டுமென்ற கருத்தில் பாடிற்றிலர் என்பதை உணர்ந்துகொள்ளலாம். ஆகவே, "கலையார் அரிகேசரியாய் போற்றி" என்னும் தொடரில் அரிகேசரி என்பது ஒருதலத்தைக் குறிப்பதாகும் என்ற பொருளை உறுதியாகக் கொள்ள முடியாது. அற்றாயின்,

> கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
> குவைப்பதி மலிந்த கோவே போற்றி

என்னும் தொடரில் உள்ள, கவைத்தலை, குவைப்பதி என்பனவும் தலங்களைக் குறியாவோ?" என்று வினவவும் கூடும். அவ்விரண்டும்கூடத் தலங்கள் அல்ல என்பது, காழி தாண்டவராயர் எழுதிய திருவாசக வியாக்கியானத்தால் தெரியவருகின்றது. "கவைத்தலை மேவிய

கண்ணே போற்றி" என்பதற்கு "வேதாகம முடிவாகிய ஞானக் கண்ணான நாதனே! உன் அடிமையை இரட்சிப்பாயாக" என்றும், "குவைப்பதி மலிந்த கோவே போற்றி" என்பதற்குப் "பார்முழுதும் திருப்பதியாகி அவைக்கு நாதனாக விளங்கும் கோவே, உன் அடிமையை இரட்சிக்க" என்றும் அப்பெரியார் பொருள் கூறிச் சென்றனர். கவைத்தலை, குவைப்பதி அரிகேசரி என்னும் தொடர்கள் தலங்களைக் குறிக்கின்றன என்று மயக்க உணர்வினால் ஒருசிலர் கொள்ளக்கூடும் என்பதை நன்கு சிந்தித்தே காழி தாண்டவராயர் இங்ஙனம் நுட்பமாகப் பொருள் விளக்கிச்சென்றுள்ளார்.

ஊசல், அம்மானை, சாழல் போன்ற நங்கைப் பாடல்கள் திருவாசகத்தில் வருவதைக் காட்டி, இவை பழங்காலப் பாடல்களில் காணப்படாதவை என்று கூற முன்வருவர். சிலப்பதிகாரம், சங்ககாலத்தை ஒட்டிய நூல் என்பது எவருக்கும் ஒப்பமுடிந்த முடிபாதலின், அந்தச் சிலப்பதிகார நூலில் நங்கைப்பாடல்கள் நிரம்பி இருத்தலைக் காணலாம். அச் சிலப்பதிகார வாழ்த்துக் காதையில்,

"சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை"

என்றும்,

"கொடுவில் பொறிபாடி ஆடாமோ ஊசல்"

என்றும்,

"பாடல்சால் முத்தம் பவழ உலக்கையால்
மாட மதுரை மகளிர் குறுவமே"

என்றும் பாடப்பட்டவை நங்கைப் பாடல்கள் அல்லவோ? ஆகவே, இதனை உணர்ந்தபின்பேனும்

அம்மானை ஊசல் போன்றவை பிற்பட்டார் காலத்தில் பாடப்படும் பாக்கள் என்று கூறவும் ஒண்ணுமோ?

தேவாரத்தில் இத்தகைய பாடல்கள் பாடப்பெறுது போயினும், மங்கை நல்லார் மேலே கூறிய ஆடல், பாடல்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதை ஞானசம்பந்தர் வாக்காலும் நன்கு உணரலாம் அன்றே? அப்பெருமானுர்.

தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்
இறைவனது தன்மை பாடிக்
கருந்தடங் கண்ணார் கழல்பந் தம்மானைப்
பாட்டயரும் கழுமலமே.

என்று பாடியிருப்பதைக் காண்க.

ஆகவே, கி. பி. மூன்றும் நூற்றுண்டில் தோன்றிய திருவாசகத்தில் நங்கைப்பாடல் வருவது முறையேயாகும்.

திருவாசகத்தில் மிகப் பழ அடியவர்களான கண்ணப்ப நாயனுரைப் பற்றிய குறிப்பும், சண்டேசுவர நாயனுரைப்பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. ஏனைய நாயன்மார்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றில. மாணிக்கவாசகர் பிற்பட்டவராயின் தொண்டர் குழாத்துள் மற்றும் சிலரையேனும் குறிப்பிட்டிருப்பார் அன்றே! ஆகவே, இவர் தேவார ஆசிரியர்கட்கு முற்பட்டவரே என்க.

மாணிக்கவாசகர் காலத்தில் புத்த சமயமே தலை எடுத்து நின்றது. அதனைச் சார்ந்தவர்களுடன் இவர் வாதிட்டு வென்றனர். மணிமொழியார் லோகாயதம் என்று குறிப்பிடுவது இந்தப் பௌத்த மதத்தினையே என்க. இவ்வெற்றிக்குப் பிறகு பல பௌத்தர் சைவராயினர். இங்ஙனம் பௌத்தர் பலர் சைவ சமயத்தில்

புகுந்தமையினை மகாவமிசம் என்னும் நூல் எடுத்து இயம்புகிறது. இந்த நிகழ்ச்சி கி. பி. மூன்ருவது நூற்ருண்டில் நிகழ்ந்ததாக அந்நூல் குறிப்பிடுகிறது.

சீரிய கிறிஸ்தவப் பாதிரியார் தம் மதக் குருக்களுக்கு எழுதிய கோட்டயக் கோயில் கடிதம் கி. பி. மூன்ரும் நூற்ருண்டினது. அக்கடிதத்தில் மணிமொழியார் பல கிறிஸ்தவர்களை மதமாற்றிச் சைவ சமயத்தவர்களாகச் செய்தமை குறிக்கப்பட்டுள்ளது. இதனை கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ, எம். எல். அவர்கள், நன்கு எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். அதுவே அவர் எழுதிய மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் என்னும் நூலில் பின்வருமாறு எழுதியிருப்பதாகும்.

“இவர் மூன்ருவது நூற்ருண்டின் பிற்பகுதிலேயே நிலவுலகில் திகழ்ந்தனர் என்பது உயர்திரு மறைமலை அடிகளால் மிக விரிவான ஆராய்ச்சி செய்து முடிவு கட்டப்பட்டது. அஃது அந்நூற்ருண்டிலேயே தென்னிந்தியாவின் மேலைக்கரையில் குடியேறி வந்திருந்த பாதிரிமார்களால் ஏட்டுச் சுவடியில் அப்பெருந்தகையார் சார்பாக எழுதிவைத்த குறிப்புக்களால் ஐயத்திற்கு இடமில்லாதபடி வலியுறுதல் காண்க. திருவனந்தபுரத்தில் உள்ள கேரள சங்கத்தின் தொல்நூல் அமைச்சராய் விளங்கும் திருவாளர் ஜெ. கே. ஜோசப் அவர்கள் மாணிக்கவாசகரைப் பற்றிய மலையாளக் கிறித்துவச் செப்புப் பட்டயங்களைத் தமது நூலொன்றில் தொகுத்து வெளியிட்டிருக்கின்ருர். அவைகள் மலையாள எழுத்தில் இருப்பதால், மாணிக்கவாசகப் பெருமான் சார்பான செப்புப்பட்டயத்திலுள்ள சொற்ருெடர்களைத் தமிழ் எழுத்தில் எழுதித் தெரியாத சொற்களுக்குப் பொருள் விளக்கமும் சேர்த்து இந்நூல் எழுதும் காலத்திலே

மிக்க அன்புடன் அனுப்பிய அவர்களது பெரு நன்றிக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். அச் செப்புப் பட்டயப் பகுதி இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. (இந்த மூலப் பட்டயத்தை அந்நூலில் இன்றும் காணலாம்.) அப்பட்டயத்தினுல் நாம் அறிந்து கொள்வது யாதெனில், காவிரிப்பூம்பட்டினம் முதலிய துறைமுகங்களில் தமிழரில் சிலர் கிறித்துமதக் குருமார் சொற்கேட்டு அச்சமய நெறி நின்றனர். கி. பி. 293வது ஆண்டிற்கு முன்னேயே அவ்விடத்தில் சைவக் கிளர்ச்சி ஏற்பட்டது. மாணிக்கவாசகப் பெருமானுடைய அடியார்கள் மேலைக்கரை முதல் கீழ்க்கரை வரையிலுள்ள பல இடங்களிலும் திருவருளினுல் பலவகை அருஞ் செயல்களை இயற்றிச் சைவத்தை வளர்த்தனர். ஆய காலைக் கிறித்து மதத்திலிருந்தும் பலர் ஆவில் ஐந்தும் உட்கொண்டு ஐந்தெழுத்தோதிச் சிவநெறிக்கு மீண்டனர். மலையாள நாட்டில் மேலைக்கரையிலுள்ள குரக்கணி என்னும் (கொல்லம்) இடத்திற்கு அருகில் சிவநெறி மீண்டார்க்கும் மீளாதார்க்கும் பிணத்தை அடக்கம் செய்யும் முறையைப்பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் முன்னையோர் பின்னையோரினின்றும் விலகி மணிக்கிராமம் என்னும் ஒரு தனி ஊர் ஏற்படுத்தி அதன் கண் வாழ்ந்தனர் என்பதே."

மாணிக்கவாசகர் மூவர்க்கும் முற்பட்டவர் என்பதற்குத் திருநாவுக்கரசருடைய வாக்குகளே போதுமான சான்றாகும். அவர் நன்கு வெளிப்படையாகத் தமது பாடல்களில் இவரைப்பற்றிய குறிப்புக்களை எடுத்துங் காட்டியுள்ளார்.

குராமலரோ டராமதியம் சடைமேல் கொண்டார்
    குடமுழந் தீசனைவா சகனுக் கொண்டார்
சிராமலைதம் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
    தென்றல்நெடுந் தேரானைப் பொன்றக் கொண்டார்
பராபரன் என்பதுதமது பேராக் கொண்டார்
    பருப்பதம் கைக்கொண்டார் பயங்கள் பண்ணி
இராவணன்என் றவனைப்பேர் இயம்பக் கொண்டார்
    இடருறுநோய் தீர்த்தென்னை ஆட்கொண் டாரே.

என்னும் திருத்தாண்டகத்தில் மாணிக்கவாசகர் முற்பிறப்பில் யாராக இருந்தார் என்பதையும், அவர் செய்து வந்த திருத்தொண்டு இன்னது என்பதையும் தெளிவு உணர்த்தி இருப்பதைக் காண்க.

ஈண்டு வாசகன் என்று குறிப்பிடப்பட்டவர் மாணிக்கவாசகர் தாம் என்பதைப் பன்னூல் பயின்று பழுத்த பேரறிவு பெற்ற டாக்டர் மகாமகோபாத்யாய உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் கூறியுள்ள பின் வரும் கூற்றுக்களாலும் தெற்றத் தெளிய உணர்ந்து கொள்ளலாம்.

"புண்டைக் காலத்தில் பூமியில் பௌத்தமதம் அதிகரித்த பொழுது, வேதாகம ஒழுக்கம் குன்ற, அக் குறையை அகற்றக் கருதிய தேவர்களுடைய பிரார்த்தனைப்படி சிவாஞ்ஞையால் திருநந்தி தேவர் ஸ்ரீவாதபுரத்தில் ஸ்ரீசம்புபாதாசிருதர் என்னும் பிராமணோத்தமருக்கும் அவர் பத்தினியார் சிவஞானவதியார்க்கும் புத்திரராக அவதரித்தருளினர் என்பது. திருப்பெருந்துறையின் வடமொழிப் புராணமாகிய ஸ்ரீ ஆதிகைலாய மஹாத்மியம் 36 ஆம் அத்யாயத்திலும் ஸ்ரீமாணிக்கவாசகருடைய வடமொழிச் சரித்திரமாகிய ஸ்ரீமாணிக்கவாசக சரித்திரம் 6 ஆம் அத்யாயத்திலும் விரித்துக் கூறப் பெற்

றிருத்தலின், இதற்கு இதுவே பொருள் என்று தெரி கிறது. இதனால் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருநா வுக்கரசு நாயனாருக்குக் காலத்தால் முந்தியவர் என்று நன்கு புலப்படுதல் காண்க."

மாணிக்கவாசகர் தம்பொருட்டு இறைவர் நரிகளைக் குதிரையாக்கிக் கொணர்ந்து பாண்டியனுக்கு அளித்தமை யினைப் பல இடங்களில் தம் திருவாசகத்தில் எடுத்து இயம்பி யுள்ளார். கீர்த்தித்திருவகவலில், "நரியைக் குதிரையாக்கிய நன்மையும்" "பாண்டியன் தனக்குப் பரிமா விற்று ஈண்டுக் கனகம் இசையப் பெறாஅது ஆண் டான் எங்கோன்" என்பன போன்ற அடிகளில் இக்குறிப் பைக் காணலாம். இவ்வாறு இறைவன் குதிரை வாணிக னாய் வந்ததும், குதிரைமீது வந்ததும், குதிரை விற்றதும், நரி குதிரைகளான்தும் திருவாசகத்தில் அடிக்கடி கூறப் பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகள் மணிவாசகர் பொருட்டே நடந்தன என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இந்த அரிய செயலை அன்றோ அப்பர் பெருமானார்,

நரியைக் குதிரைசெய் வானும், நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்

என்று பாடிப் பரவசமுற்றுள்ளார்.

இறைவர் மண் சுமந்த வரலாறு வந்தி என்னும் மூதாட்டியார் பொருட்டு என்றாலும், வையையில் வெள்ளப்பெருக்கு நேர்ந்தமைக்கு அடிப்படைக் காரணர் மணிமொழியார் ஆவார். இதனை அவர் முழு வரலாற்றில் காண்க. இவ்வையைப் பெருக்கிற்குப் பின்னர் உடைப்புக்களை அடைக்க அரசன் முனைந்தபோதுதான், வந்தியம்மையார் பங்கினை அடைக்கச் சுந்தரேசப் பெரு மானார் கூலியாளாக வந்து வையைக் கரையை அடைக்க

லுற்றார். அதுபோது இறைவர் வையைக் கரையில் நின்ற கோலத்தின் நிலையினை, வாகீசப் பெருந்தகையார் தம் திருப்பூவணத் தாண்டகத்தில்,

> அருப்போட்டும் முலைமடவாள் பாகம் தோன்றும்
> அணிகிளரும் உருமென்ன அடர்க்கும் கேழல்
> மருப்போட்டும் மணிவயிரக் கோவை தோன்றும்
> மணமலிந்த நடம்தோன்றும் மணியார் வையைத்
> திருக்கோட்டில்நின்றதோர் திறமும் தோன்றும்
> செக்கர்வான் ஒளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
> பொருப்போட்டி நின்ற திண் புயமும் தோன்றும்
> பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஈண்டு "வையைத் திருக்கோட்டின் நின்றதோர் திறமும் தோன்றும்" என்பதன் பொருளை நன்கு மனத்தில் கொண்டே பரஞ்சோதியார்,

> வந்திக்குக் கூலிஆளாய் வந்தவன் யார்என் றோடிக்
> கந்தர்ப்பன் எனநேர் நின்ற காளையை நோக்கி

என்றும்,

> கரும்பனும் விரும்பநின்ற கட்டழ குடையன் என்பார்.

என்றும் பாடியுள்ளார்.

இவ்வாறு இறைவன் வையைக் கரைக்குப் போந்து மண் சுமந்து வந்திக்கு உதவிய தன்மையினை மணிமொழியார் கீர்த்தித் திருவகவலில்,

> ஆங்கது தன்னில் அடியவட் காகப்
> பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்

என்றும், திருவம்மானைப் பகுதியில்,

மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானை.

என்றும் பாடியிருப்பதிலிருந்து நன்கு உணரலாம்.

திருப்பெருந்துறை என்னும் திருப்பதி மணிமொழியார் காலத்தில்தான் சிறப்புற்றதே அன்றி, அதற்கு முன் அன்று. அவர்தாம் அங்கு ஆலயம் எடுத்தவர். அதன் பின்பே ஒரு சிறந்த க்ஷேத்திரமாகக் கருதப்பட்டது. அச் க்ஷேத்திரத்தையும் இணைத்தே தாண்டக வேந்தர் தம் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில்,

ஆவூர் மூலட் டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும்
பெருந்துறை காம்பிலி பிடவூர் பேணும்
கூரார் குறுக்கை வீரட் டானமும்
கோட்டூர் குடமூக்குக் கோழம்பமும்
காரார்கழுக் குன்றும் கானப் பேரும்
கயிலாய நாதனையே காண லாமே.

என்று குறிப்பிட்டார்.

திருப்பெருந்துறைக்கும் திருவாதவூரருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பட்டினத்தடிகளும், "திருந்திய அன்பில் பெருந்துறைப் பிள்ளையும்" என்றே குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே, தேவாரத்தில் மணிமொழியாரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுதலின், மணிமொழியார் மூவர்க்கும் முற்பட்டவர் என்பதில் ஐயம் எழ இடம் இல்லை என்க.

## மணிமொழியார் அடியார் கூட்டத்தில் இருக்கவே அவாவுவர்

“திருவாதவூரர் தொண்டர் கூட்டத்தில் இணைத்துப் பேசுதற்குரியர் அல்லர். அவர் அறிவால் சிவனே ஆன வர். இதனால்தான் சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் கூருது விடுத்தனர்” என்று ஒரு சிலர் கூற முற்படுவர். இந்தக் கருத்தை நிலைநாட்டுதற்கு மேற் கோளாக, இலக்கணக்கொத்து உரையில் கூறப்படும் “மாணிக்கவாசகர் அறிவால் சிவனே” என்பதை எடுத் துக் காட்டுவர். யாண்டேனும் மணிவாசகப்பெருமானர் தமது நூலகத்துத் ‘தாம் அறிவால் சிவனே’ என்று கூறியுள்ளாரா என்பதை ஆராய்தல் வேண்டும். இவ் வாறு அவர் யாண்டும் கூறிற்றிலர். அவரது நூலை நன்கு அலசி அலசிப் பார்க்குங்கால், தாம் அடியார் கூட்டத்துள் ஒருவராகவே இருக்க ஆசைப்பட்டார் என்பது நன்கு புலனுகும்.

உடையாள் உன்தன் நடுஇருக்கும் உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானல் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு ளைப்புரியாய்பொன் னம்பலத்தென்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

என்றும்,

செடியார் ஆக்கைத் திறம்அற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென் கண்ணிணை களிகூரப்
படிதான் இல்லாப் பரம்பர னேஉன் பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே

என்றும்,

*உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல்*
*மற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள்பாராதே*
*பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே*
*அத்தன் ஆண்டுதன் அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே.*

என்றும்,

*நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ*

என்றும் திருவாசகத்தில் வரும் பாடல்களைக் கண்டால், மணிமொழியார் அடியார் இனத்தில் இருக்கும் பேற்றினையே விரும்பி நின்றார் என்பது பெறப்படும். அச்சோப் பதிகத்தில் ‘எனையாண்ட’ என்று கூறும் இடங்களில், தம்மை இறைவர் அடிமையாக்கி ஆட்கொண்டதையே குறிப்பிட்டுச் சென்றார். இறைவனும் அடியாராகவும், அடியார் இனத்து இருக்க விருப்பம் உள்ளவராகவும் இருக்கின்றார் என்பது, சுந்தரருக்குத் திருவாரூரில் அடியெடுத்துக் கொடுத்த குறிப்பால் உணரலாம். திருவாரூர்த் தியாகேசர், ஏன் “தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” என்ற அடியினை எடுத்துக் கொடுத்தனர் ? அதில்தான் அரிய குறிப்புக் காணப்படுகிறது. தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர். அம்மூவாயிரம் என்னும் தொகை தில்லை நடராஜப் பெருமானையும் இணைத்தபோதுதான் எண்ணிக்கையில் சரியாகும். ஆகவே, நடராஜரும் தில்லைவாழ் அந்தணர்களான தொண்டர்களில் ஒருவர் என்பது தெரிகிறது. இங்ஙனம் தாமும் தொண்டராக இருக்கும் நிலையினை உணர்த்தவே “தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” என்ற அடியினை எடுத்துக் கூறினர். இறைவர் அடியார் இனத்துள் இருப்பவர் என்பதை நம் திருமுறைகள் விளக்கமுறக் கூறியுள்ளன. அப்பர் பெருமா

ளும் "வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத் தகத்தான்" என்றே பாடியுள்ளார். இங்ஙனம் இருக்க, "மணிமொழியார், அடியவர் அல்லர். அவர் அறிவால் சிவனே ஆனவர் ஆதலின், அடியார்களைப் பற்றிக் குறிப் பிடும் திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டிலர் என்பது பொருந்தாது. ஆகவே, சுந்தரர் பொய்யடிமை இல்லாத புலவர் என்றது மணிமொழியாரையே என்க.

## பொய்யடிமை இல்லாத புலவர் என்று கூறப்பட்டதன் நோக்கம்

ஈண்டும் ஒரு தடையினை எழுப்ப அன்பர் சிலர் முந்தக்கூடும். அதாவது "நம்பி ஆரூரர், தமது திருத் தொண்டத் தொகையில் மாணிக்கவாசகர் என்றோ, திரு வாதவூரர் என்றோ வெளிப்படையாகக் கூறாது, 'பொய் யடிமை இல்லாத புலவர்' என்று குறிப்பிட்டிருப்ப தால், அத்தொடர் மணிமொழியாரை எவ்வாறு உணர்த் தும்?" என்பதாம். வன்றொண்டப் பெருந்தகையார் குறிப் பிட்ட அடியவர்கள் பெயர்கள் யாவும் இயற்பெயர்கள் அல்ல. அவற்றுள் பல காரணப் பெயர்களே ஆகும். அவை யாவும் அவர் அவர்களின் இயல்புகளை விளக்கும் பெயர்களாக இருக்கின்றன. இயற்பகை நாயனார், மெய்ப் பொருள் நாயனார் என்பன போன்ற பெயர்கள் அந் நாயன்மார்களின் அரும்பெருஞ் செயல்களால், இயல்பு களால் ஏற்பட்ட திருப்பெயர்கள். இந்த முறைக்கிணங் கவே, ஈண்டுச் சுந்தரமூர்த்திசுவாமிகள் மணிமொழியாரது திருப்பெயரை வெளிப்படையாகக்கூறாது, அவரது இயல் பைச் சிறப்பிக்கும் முறையில், பொய்யடிமை இல்லாத புலவர் என்று குறிப்பிட்டுச் சென்றனர் என்க. "அற் றயின் மணிமொழியாரை மட்டும் ஏன் பொய்யடிமை

இல்லாத புலவர் எனச் சிறப்பித்தல் வேண்டும்? மணி மொழியார் பொய்யடிமை இல்லாத புலவர் எனில், ஏனைய அடியவர்கள் பொய்யடிமை யுடையவர் என்பது பெறப்படாதோ?" என்று கடாவவும் கூறும். இவ்வாறு வினவுபவர்கட்கு, நம்பியாரூரது திருவாக்கைக் கொண்டே விடையிறுத்தல் சாலவும் பொருத்தமாகும். ஆளுடைய நம்பிகள் இயற்பகை நாயனரைப் பற்றிக் குறிப்பிடுங்கால், "இல்லையே என்னத இயற்பகை" என்று குறிப்பிட்டனர். இங்ஙனம் இயற்பகையாரைக் குறிப்பிட்டதனல், ஏனைய நாயன்மார்கள் தம்மை அடுத்துக் கேட்டவர்கட்கு இல்லை என்று கூறியவர்களா என்பதையும் நாம் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும். தொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றில் எந்தத் தொண்டரும், தம்மிடம் வந்து கேட்டவர்கட்கு இல்லை என்று உரைத்ததாகக் கண்டிலம். தம்மை அணுகியவர் விரும்பிக் கேட்டதை ஈந்தே புகழ் பெற்றனர். அவ்வாறு இருக்க, இயற்பகையாரை மட்டும் இல்லையே என்று கூறியது பொருத்தம் இல்லை என்று கூறிவிடலாமா? சுந்தரர்தம் திருவுள்ளத்தில் அடியார்களைப் பற்றிய நினைவு எவ்வெவ்வாறு எழுந்ததோ, அவ்வவ்வாறு திருவருள் துணைகொண்டு பாடிச் சென்றனர். அந்த முறையில் மணிமொழியாரைப் பற்றிக் கூறவந்த இடத்துச் சிறப்புப் பெயராகப் பொய்யடிமை இல்லாத புலவர் என்று கூறினர் என்க.

## நாயன்மார் அறுபத்துமூவர்தாம் என்பது எவ்வாறு பொருந்தும்?

மற்றும் சிலர், "பொய்யடிமை இல்லாத புலவர் மணிமொழியாராயின், நாயன்மார்கள் அறுபத்துமூவர் என்ற எண்ணிக்கை மாறுபட்டுவிடுமே. மாணிக்கவாசகரை

அடியாரோடு இணைத்து விட்டால், அறுபத்துமூன்று அடியார்கள் அறுபத்துநான்காகி விடுவரே" என்பர்.

நாயன்மார்கள் அறுபத்துமூவர் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது. தனியடியார்கள் அறுபத்துமூவர்தாம் என்பதற்குத் தக்க சான்று திருத்தொண்டத்தொகையில் இல்லை. திருத்தொண்டத்தொகையில் இறுதித் திருப்பாட்டில் குறிப்பிடப்பட்ட சடையனார், இசை ஞானியார் ஆகிய இவர்களையும் அடியார்களாகக் கொண்டு, நாயன்மார்கள் அறுபத்துமூவர் என்று கருதினர். இவ்விருவர்களையும் அடியார்களாகக் குறிப்பிட நம்பியாரூரர் எண்ணவில்லை என்பது, அவரது திருவாக்கினால் பெறப்படுகிறது. இவ்விருவர்களையும் அவர் அடியவர்களாகக்கருதி இருப்பாராயின், ஏனைய நாயன்மார்களுக்கெல்லாம் தாம் "அடியேன் அடியேன்" என்று குறிப்பிட்டு வந்ததுபோல, இவர்களின் திருப்பெயர்கட்குப் பின்னர் "அடியேன்" என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் குறிப்பிடாமல், தாம் இன்னாருடைய திருமகனார் என்பதை விளக்க, "சடையன் இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்" என்றே பாடியுள்ளார். இங்குக் கூறப்பட்ட கருத்துக்கள் உண்மை என்பதை,

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையார் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்த சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பர் ஆவாரே.

என்னும் திருத்தொண்டத் தொகையின் இறுதித் திருப் பாட்டினை நன்கு படித்து உணர்ந்த பின்பேனும் உறுதி கொள்வோமாக.

ஆகவே, நாயன்மார்கள் அறுபத்துமூவர் என் பதை நிலைநாட்டமுடியாது. நாயன்மார்கள் அறுபத்து மூவர் என்று நாம் 'எண்ண இடந்தந்தவர்கள், நம்பி ஆண்டார் நம்பிகளும், அவரை ஒட்டிப்பின் வந்த சைவ மரபுடை அன்பர்களும் ஆவார். ஆராய்ச்சி உலகில் அறுபான்மும்மை நாயன்மார்கள் என்று கூறி, நாயன் மார்களின் எண்ணிக்கையினை முடிவு கட்டிவிடுதல் வேண்டா.

இங்ஙனம் எல்லாம் ஆய்ந்து கண்டதனால், பொய் யடிமை இல்லாத புலவர் மணிமொழியார்தாம் என்பதை அறிந்து, இதுவே சுந்தரர் கருத்து என்பதையும் உணர்ந்தோம். இனி, மணிமொழியார் பொய்யடிமை இல்லாத மெய்யடிமை உடையார் என்பதை ஒரு சிறிது உணர்வோமாக.

## பொய்யடிமை இல்லாத புலவர் மணிமொழியார் என்பதை அவர் வரலாற்றால் அறிதல்

வாதவூர் அடிகளார் பாண்டிமன்னன் பணத்தினைப் பெற்றுப் பரிகளைக் கொணரச் சென்றவர், பரமன் அருள் மேனிதாங்கித் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் குருவடிவுடன் இருந்த நிலையினைக் கண்டதும்,

மின்னினும் நிலைமை இல்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உன்னடி அடைந்த நாயேன் உறுபவம் ஒழித்தல் வேண்டும்
என்னை இன் றடிமை கொள்வாய் எம்முயிர்க் கிறைவா என்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாம் கண்ணீர் வார.

என்று தம்முறைப்பாட்டினைக் கூறித் தம் பொய்யடிமை இல்லா மெய்யடிமைத் திறனை வெளிப்படுத்தி நின்ற நிலையினைக்கடவுள் மாமுனிவர் தாம்பாடிய திருவாதவூரர் புராணத்தில் பாடியுள்ளார். மணிமொழியாருடைய பொய் யடிமை இல்லா மெய்யடிமையினை மேலும் வலியுறுத்தும் முறையில், அன்னாருக்கு வணக்கம் கூறும் வகையில், திருவிளையாடற்புராண ஆசிரியராம் பரஞ்சோதி முனிவர்,

எழுதரும் மறைகள் தேறா இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீது ஏறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்

என்று பாடிப் பரவசமுற்றதையும் எடுத்துக்காட்டாகக் காட்டலாம். எனவே, பொய்யடிமையில்லாத புலவர் மணிமொழியாரே யாவர். இதில் ஆசங்கை ஒன்றும் இல்லை. சேக்கிழார்பெருமானார் இக் கருத்தை நன்கு ஆய்ந்து முற்றத் தெளிந்து தாம் பாடியுள்ள பொய் யடிமை இல்லாத புலவர்களைப் பற்றிப் பாடவந்த இடத்தில் பாடி அமைத்துள்ளார். அதனை இனிக் காண்போமாக.

## சேக்கிழார், பொய்யடிமை இல்லாத புலவரைச் சங்கப் புலவராகக் கருதிலர்

பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் சங்கப் புலவர் அல்லர், என்பதைச் சேக்கிழார் எப்படி விலக்கியுள்ளார் என்பதை முதலில் நிலைநாட்டிப் பின்பு அவ் வரலாற்றில் குறிப்பிடப்பட்டவர் மணிமொழியாரே என்பதை அவர் வாக்கைக்கொண்டே நிறுவுவோமாக.

சேக்கிழார் பெருமானார் நாயன்மார்களின் வரலாற்றைப்பாடும் முறையே ஒரு தனிப்போக்கு. ஒவ்வொரு

நாயன்மார் வரலாறுகளைக் குறிப்பிட்டுப் பாடி முடித்த பின்பு, தாம் கொண்டுள்ள அடியார் பற்றை வெளிப் படுத்த "இதுவரை இந்த அடியார் வரலாற்றைக் குறிப் பிட்டேன். இனி, அன்னார் திருவடிகளை வணங்கிக் கொண்டு அடுத்த அடியாரைப் பற்றிக் கூறத்தொடங்கு கின்றேன்" என்று கூறிச்செல்வர். இந்த மரபுப்படி கூற்றுவநாயனார் புராணத்தைப் பாடிமுடித்தார். அடுத்த தாகக் கூறப்போவது பொய்யடிமை இல்லாத புலவர் புராணமாகும். அந்தச் சமயத்தில் தம் வழக்கப்படி,

காதல் பெருமைத் தொண்டின்நிலைக் கடல்சூழ்வையம் காத்தளித்தும்
கோதங் ககல முயல்களந்தைக் கூற்றனார்தம் கழல்வணங்கி
நாத மறைதந் தளித்தாரை நடைநூல் பாவில் நவின்றேத்தும்
போத மருவிப் பொய்யடிமை இல்லாப் புலவர் செயல்புகல்வாம்.

என்று பாடியருளினர்.

இப்பாடலில் சங்கப்புலவர்களுள் ஒருவர் பெயரையும் குறித்திடாமல் பாடியுள்ளதையும், புலவர்கள் என்று குறிப்பிடாமல் மரியாதைப்பன்மை மரபுப்படி ஒருவர் என்ற குறிப்புத் தோன்ற புலவர் என்றே குறிப்பிட் டிருப்பதையும், மதுரையைப் பற்றியோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியோ யாதொரு குறிப்பும் தோன்றப்பெறுமல் செய்யுளினைப் பாடி அமைத்திருக் கும் முறைமையினையும் நாம் சிந்திக்கவேண்டாவா? பொய்யடிமை இல்லாத புலவர் சங்கச் சான்றோராயின், குன்றையாளியார் தமிழ் வளர்ந்த திருப்பதியாகிய மதுரையைப் பற்றி ஒரு மொழியேனும் கூறவேண்டாவா? மூர்த்திநாயனார் புராணத்தைப் பாடும் போதே பாண்டிய நாட்டைப்பற்றியும், மதுரைமா நகரைப்பற்றியும், தமிழ்ச்சங்கத்தைப்பற்றியும்,

சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பின் ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாட வைப்பு
ஏர்மன்னு சிந்தைப் பலநல்துறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு

மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேயம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்குவாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு ஆலவாயில்
எம்மைப் பவம்தீர்ப் பவர்சங்கம் இருந்த தென்றால்

என்று பெருங்களிப்புடன் பாடி மகிழ்பவர், ஏன் ஈண்டு மதுரையைப்பற்றிய குறிப்பு ஒன்றும் பேசிற்றிலர்? வேண்டுமென்றே பேசிற்றிலர் என்க. ஒருவேளை, "காதல் பெருமை" என்று தொடங்கப்பெறும் கவி பொய்யடிமை இல்லாப் புலவர்களைப் பற்றித் தோற்று வாய் உணர்த்தும் செய்யுள் ஆதலின், அதில் மதுரை யைப் பற்றிக் குறிப்பிட வாய்ப்பில்லை. அன்னாரைப் பற்றிப் பாடப்போகும் புராணத்தில் அத்தகைய குறிப்புக் காணக் கூடும்" என்று கருத்துக் கொள்ளலாம்.

பொய்யடிமை இல்லாத புலவர்களைப்பற்றிய புரா ணத்தில் சேக்கிழார் பெருமானால் பாடப்பட்ட கவிகள் மூன்று. அவற்றுள் இரண்டு அன்னார் இயல்புகளை அறிவிக்கும் செய்யுட்கள். மூன்றாம் பாடல், தம் மரபுப் படி அதுவரை பேசிய அடியார் திருவடி போற்றி அடுத் துக் கூறப்படும் நாயனார் வரலாற்றைப்பற்றிய தோற்று வாய் கூறும் பாடல். அம்மூன்று செய்யுட்கள்,

செய்யுள்நிகழ் சொல்தெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கிஒளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை இல்லாத புலவரெனப் புகழ்மிக்கார்

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமை அல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்அடிமை உடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்

ஆங்கவர்தம் அடியிணைகள் தலைமேல்கொண்டு அவனியெலாம்
தாங்கியவெண் குடைவளவர் குலம்செய்த தவமனையார்
ஓங்கிவளர் திருத்தொண்டின் உண்மைஉணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர் திருத்தொண்டு புகல்கின்றாம்

என்பன.

இம்மூன்று செய்யுட்களில் யாண்டேனும் மதுரையைப்பற்றிய குறிப்போ, அன்றித் தமிழ்ச்சங்கத்தை ஒட்டிய குறிப்போ உண்டோ? இல்லை அல்லவா? சங்கப் புலவர்கள் "மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்" என்று அறுதியிட்டு உறுதியாகவும் கூற இயலாதே. எற்றுக்கோவெனில், சங்கமருவிய சான்றோருள் சிவநெறியினர் மட்டும் அன்றிப் பௌத்த வைணவ நெறியினர்களும் இணைந்து நின்றனர். அவ்வாறிருக்க, அவர்கள் யாவரையும் ஒருசேரச் சிவநெறியினர் எனக் கருதிச் சுந்தரர் சங்கச் சான்றோருக்குத் தாம் அடியேன் என்று கூறுவரோ? கூறார் அன்றோ? சேவையர் காவலர் "மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்" என்று குறிப்பிட்டுக் கூறுவது மணிமொழியாரையே எனலாம். மணிமொழியாரும் தாம் கற்ற கல்வி இனிச்சாலும் கற்றதன் பயன் கண்ணுதல் பரமன் கழலடி கருதி உய்தலே யாகும் என்பதைத் தம் திருவாசகத்தில்,

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்

குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

என்று பாடியுள்ள பாட்டின் பொருள் பொலிவினை உணர்ந்தே சேக்கிழார் பெருமானார்,

" செய்யுள்நிகழ் சொல்தெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கொளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார் "

என்று உளங்குளிர ஓதுவாரானார்.

மணிமொழியாரும் மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார் என்ற குறிப்புக்கு ஆதாரமாக அவரது திருவாசகத்தில் எடுத்த திருப்பாட்டின் தொடக்கத்திலேயே திருவடி மாண்பே சிறப்புறப் பாடப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டலாம். இதனை,

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சே அடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

என்ற சிவபுராணப் பாடலில் தெளிவுறக் காண்க.

திருவாதவூரர் மறந்தும் புறந்தொழா மாண்பினர் என்பது திருவாசகத்தில் ஐயந்திரிபறக் காணப்படுகின்றது.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு; குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்;நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின்,இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல் லாதெங்கள் உத்தமனே

என்ற பாடலும்,

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வம் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே

என்ற பாடலும் மணிமொழியார் சிவனாரிடத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினை வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனைச் சேக்கிழார் பெருமானார் திருவாசகத்தில் நன்கு கண்டமையினால்தான், பொய்யடிமை இல்லாத புலவர் புராணத்தில் அவரைப்பற்றிய குறிப்புக் கூறும்போது, இரண்டாம் செய்யுளில்,

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமைஅல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினின் மெய்யடிமை உடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்

என்று உளமாரப் போற்றிப் புகழ்கின்றார். இங்ஙனமிருக்கத் திருமாலையும், அவரை ஒத்த தெய்வங்களையும் வணங்கி வழிபடுவோர் நிறைந்த சங்கப்புலவர்களை, "புரிசடையார்தமை அல்லால் சொற்பதங்கள் வாய் திறவா *** மெய்யடிமை யுடையாராம்" என்று எப்ப்டிக் கூற இயலும்?

இன்னோரன்ன காரணங்களால் பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் திருவாசகமாம் பெருநூலைத் திருவாய்மலர்ந்தருளிய திருவாதவூரரே என்க.

## மாணிக்கவாசகர் பெரும் புலவர் என்பதற்குரிய காரணங்கள்

அவர் புலவராதலினால்தான் அவரது வாக்குகள் மணிமொழிகளாயின. இதனால் அவர் மாணிக்கவாசகர் என்ற தீட்சா நாமமும் இறைவரால் கொடுக்கப் பெற்றனர். மேலும், அவர் பாடிய திருப்பாடல்களை இறைவரே விழைவுற்றுத் தம் திருக்கரத்தால் எழுதியும் அருளினர். இங்ஙனம் இறைவர் எழுதினமைக்குக் காரணம் பெரும்புலவர் பாடிய பாடல்களைத் தாம் எழுதினால் புகழ் கிடைக்கும் என்பதனாலாகும் என்று கற்பனை செய்து துறைமங்கலம் சிவப்பிரகாசர் தாம் பாடிய நால்வர் நான்மணிமாலையில்,

*நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ !*
*மனம்நின்று உருக்கும் மதுர வாசக !*
*கலங்குறு புலனெறி விலங்குறு வீர !*
*திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்*
*ஒருகலை யேனும் உணரான்; அஃதான்று*
*கைகளோ ஒன்று காலையில் காணும்*
*மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்*
*பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்*
*ஆயினும் தன்னை நீ புகழ்ந்து உரைத்த*
*பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்*
*புகழ்ச்சி விருப்பன் போலும்*
*இகழ்ச்சி அறியா என்பணி வோனே.*

என்று இவ்வாறு குறிப்பிட்டும் அருளினர். இந்த அளவில் கூத்தரசர் திருவாசகத்தை எழுதியதோடு அமையாமல், " பாவை பாடின வாயால் ஒரு கோவை பாடுக

என்று வேண்டி, நம் மாணிக்கவாசகரைக் கொண்டு தம்மீது திருக்கோவையாரையும் பாடும்படி செய்து கொண்டனர். மணிமொழியாருடைய வாசகங்கள் மணி போன்றவை என்பதோடு இல்லாமல், தேன்போலச் சுவைக்கக் கூடிய அளவுக்கு இருக்கின்றமையால், தாம் தனித்துப் பொழுது போக்க நேரிடும்போது, அப் பொழுதினை வீணே கழிக்காமல் நூலைப்படித்துக் கவிச் சுவையினைத் துய்த்துக் காலத்தைப் போக்கவேண்டு மென்று கருதியே மணிமொழியார் நூலையே விரும்பித் தம்மிடம் வைத்துக்கொண்டனர் என மனோன்மணீயம் ஆசிரியர் திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டை யும் நினைவு கொள்வோமானால், திருவாதவூரர் பொய் யடிமை இல்லாத புலவர் என்றும், பெரும்புலவர் என் றும் கூறப்படுவதன் உண்மை, மேலும் உறுதிப்படுவ தாகும். திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டு,

> கடையூழி வருந்தனிமை கழிக்க அன்றோ அம்பலத்துள்
> உடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே

என்பது.

மாணிக்கவாசகனார் மாபெரும் புலவர் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. அவர் பரந்த புலமை பெற் றிருந்தார் என்பது, அவரால் இயற்றப்பட்ட திருவாசகத் தாலும் திருக்கோவையாராலும் நன்கு புலனாகின்றது. அவர் தமக்கு முன் இருந்த இலக்கண இலக்கியங்களில் நன்கு பயிற்சி பெற்றிருந்தார்.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

என்பது தொல்காப்பிய நூற்பா. இப்பாவில் முழுமுதற் பரமனைக் குறிக்க "முனைவன்" என்னும் சொல் பெய்யப்

பட்டிருக்கிறது. இச்சொல்லினை நமது வாதவூர் அடிகளார் தம் திருவாசகத்தில் பரமனைக் குறிக்க எடுத்து ஆண்டுள்ளார்கள்.

முனைவனே முறையோநான் ஆனவாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயினானே

என்றும்,

முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே

என்றும் சுட்டறுத்தல் என்ற இடத்து ஆளப்பட்டிருப்பதைக் காண்க.

ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தின் கண்,

உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று

என்ற சூத்திரம் மிளர்வதைக் காணலாம். இச்சூத்திரத்தினை அப்படியே எடுத்துக்கொண்டு, மணிமொழியார் தமது திருக்கோவையாரில்,

தாயிற் சிறந்தன்று நாணுதை யலாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளிதிண் கற்பின் விழுமிதன்றிங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எம் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே

என்று பாடி அமைத்திருப்பதை அறிதல் வேண்டும்.

அகநானூற்றில்,

கோழிலை வாழைக் கோள்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரல் பலவின் சுளையொடு ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்

அறியா தூண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் கின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட

என்ற பாடல் வருகின்றது.

இப்பாடல் பொருளை நன்கு உளத்தில் கொண்டே மணிமொழியார்,

மையார் கதலிவனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரும் இரும்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத் தான்மதியூர் கொள்வெற்பின்
மொய்யார் வளர்இள வேங்கைபொன் மாலைபின் முன்னினவே

என்று பாடியருளினர்.

கற்றூர் ஏத்தும் கலித்தொகையில்,

பலவுறும் நறும்சாந்தம் படுபவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செயும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செயும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செயும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

என்னும் சுவை மிகுந்த பாடல்கள் காணப்படுகின்றன. இச் சுவை மிகுந்த கவிகளில் மூழ்கிய நம் திருவாதவூரர் தமது நூலாகிய திருக்கோவையாரின்கண் இம்மூன்று தாழிசைகளின் சொல்லும் பொருளும் தோய்ந்திருக்கும் வண்ணம்,

" சுரும்பிவர் சந்தும் தொடுகடல் முத்தும்வெண் சங்கும்எங்கும்
விரும்பினர் பால்சென்று மெய்க்கணி யாம்வியன் கங்கை என்னுட
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம் பலம்அனைய
கரும்பன மென்மொழி யாரும்அந் நீர்மையர் காணுநர்க்கே "

என்று இசைத்தருளினர்.

உலகம் ஏத்தும் ஒப்புயர்வற்ற நூலாகிய திருக்குறளில்,

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்ற குறள் இருப்பதை நாம் அறிவோம். அக்குறளின் பொருளன்றோ,

தெய்வம் பணிகழ லோன்தில்லைச் சிற்றம் பலம்அனையாள்
தெய்வம் பணிந்தறி யாள்என்று நின்று திறைவழங்காத்
தெய்வம் பணியச்சென் றாலும்மன் வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணி அன்னார் பரிசின்ன பான்மைகளே

என்று பாடச்செய்தது.

மேலும் திருக்குறள் நூலில்,

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் "

என்ற குறட்பாவும் உளது. இக் குறட்பாவை நினைவில் கொண்டுதான் ஆளுடைய அடிகளார்,

யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலத் தான்அமைத்த
ஊழின் வலியது தோன்றென்னை யொளிமே கலையுகளும்
வீழும் வரிவளை மெல்லிய லாவிசெல் லாதமுன்னே
சூழும் தொகுநிதி யோடன்பர் தேர்வந்து தோன்றியதே

என்று இப்பாடலைப் பாடி முடித்தனர் என்க.

மேலும் நம் ஆளுடைய அடிகளார் பாடித் தந்த திருக்கோவையாரில்,

*மீண்டார் எனஉவந் தேன்கண் டிரும்மைஇம் மேதகவே*
*பூண்டார் இருவர்முன் போயின ரேபுலி யூர்எனைநின்*
*றாண்டான் அருவரை ஆளியன் னானைக்கண் டேன்அயலே*
*தூண்டா விளக்கனை யாய்என்னை யோஅன்னை சொல்லியதே*

என்ற அரும்பெருங் கவியில் தமிழ் நாட்டு மக்களின் நாகரிகப் பண்பாடு அமைந்திருத்தலைக் காணலாம். இத்தகைய நாகரிகப் பண்பாட்டை இப்பாடலில் நம் திருவாதவூரர் பாடிக் காட்டுதற்குப் பெருந்துணையாக இருந்தது,

*"பிறன்மனை நோக்காத பேர்ஆண்மை சான்றோர்க்கு*
*அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"*

'என்னும் குறட்பா அன்றோ?

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க" என்று இறைவனை வாழ்த்தியதன் கருத்து, சீவன்கள் தாம் வாழ்வதற்காகவே ஆகும் என்பதைப் பின்னர்,

*வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்*
*தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெலாம் தொழவேண்டிச்*
*சூழ்த்துமது கரமுரலும் தாரோயை நாயடியேன்*
*பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே*

என்று விளக்கியருளியது அவரது நுண்ணறிவுத்திறனை வெளிப்படுத்தி நிற்கிறது.

உலகில் 'இருதலைக்கொள்ளி எறும்புபோல்' என்ற முதுமொழி வழங்கப்படுதலை நாம் அறிவோம். இப்பழமொழியின் பொருள், "ஒரு கழியின் இருமுனைகளும் பற்றிக்கொண்டபோது, இடையில் அகப்பட்ட எறும்பு

வேதனை படுவதுபோல" என்பதாகும். ஆனால், இருமுனைகளில் நெருப்பு இருந்தால் நடுப்பக்கம் வழிகண்டு வெளிவந்து தன் வேதனையைப் போக்கிக்கொள்ள எறும்புக்கு வாய்ப்புண்டு. ஆகவே, அப்பழமொழி நெருப்பிடையே அகப்பட்ட எறும்பின் வேதனையை முற்றமுடிய எடுத்து உரைப்பதாக மாட்டாது. இந்தக் கருத்தை நன்கு சிந்தித்த மணிமொழியார், அப்பழமொழியைச் சிறிது மாற்றி, "இருதலைக்கொள்ளியின் உள் எறும்பு ஒத்து" என்று பாடித் தமது திருவாசகத்தில் காட்டியிருப்பது மணிமொழியாரின் பேரறிவுத் திறனுக்கு எடுத்துக் காட்டாக உள்ளது.

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூஇலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே

என்பதே அப்பழமொழி அமைந்த பாடல்.

உலகில் பல் பொருள்கள் காணப்படுகின்றன. அப்பொருள்கள் தாமாகத் தோன்றுவன அல்ல. அவை தோன்றற்கு ஒரு சக்தி வேண்டியதாக உள்ளது. அச்சக்தியே இறை எனப்படும். இந்த உண்மையைத்தான் "அவனை அன்றி ஓர் அணுவும் அசையாது" என்று வழங்கப்பெற்றுவரும் பழமொழி விளக்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உலகுக்கு முதற் காரணன் இறைவன் என்பது பெறப்படுகிறது. இதனை வள்ளுவரும்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முற்றே உலகு"

என்ற குறளாலும் தெளிவுபடுத்தியுள்ளார். இக்குறளின் தெளி பொருளை நாம் எங்கே உணராமல்

போகின்றோமோ என்ற எண்ணத்தினராய்ப் பரிமேலழகர் விழிப்புடன் " காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன் முதற்றே உலகு என உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க" என்று உரை வகுத்துச் சென்றனர்.

இவ்வாறு வள்ளுவர் உள்ளம் அறிந்து உரை கண்டார் அன்றோ பரிமேலழகர்? இப்பரிமேலழகருக்கும் பல்லாண்டு முன்னிருந்த மணிமொழியார் அக்குறட் பாவின் ஆழ்ந்த கருத்தை அறிந்து, தாம் இறைவனை விரும்பியதற்குக் காரணம் உலகமே சான்றாகும் என்று அறிவித்தருளினர். அங்ஙனம் அறிவித்த பாடல்,

கோலமேனிவ ராக மேகுண மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன் சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்
கால மேஉனை ஓதநீ வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே

என்பது.

உலகம் என்னும் சொல்லுக்குரிய பரியாய மொழி களில் ஞாலம் என்பதும் ஒன்று. உலகத்திற்கு ஞாலம் என்ற பெயர் கொடுத்தமைக்குக் காரணம் உலகம் வெளியில் தொங்கிக்கொண்டிருப்பதனால் என்க. ஞாலு தல், தொங்குதல். இவ்வாறு உலகங்கள் வெட்ட வெளியில் தொங்கிக்கொண்டிருப்பதற்குக் காரணம் இறைவனது கட்டளைக்கிணங்கியே ஆகும். " இங்ஙனம் யாவற்றையும் நிலைநிறுத்தவல்ல பேராற்றல், இறைவா, உன்னிடத்தில் இருப்பதனால்தான் உன்னை நச்சினேன்" என்று கூறித் தமக்குள்ள ககோளப் புலமையும் காட்டி

மணிமொழியார் கூறி இருப்பது அவரது பரந்த புலமையைக் காட்டவில்லையோ?

மணிமொழியார்க்குக் ககோளப் புலமை இல்லையாயின்,

“ அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றுக் கோடியின் மேற்பட விரிந்தன ”

என்று பாடமுடியுமோ? அண்டங்கள் தாழாது நிலை நிற்கின்றன என்று, “அந்தரத்ததிலகோடி தாழாமல் நிலை நிற்கவில்லையோ” எனத் தவராச சிங்கமாம் தாயுமானுர் கூறுவதும் மணிமொழியார் கருத்துக்கு அரண் செய்வது அன்றோ?

திருவாசக ஆனந்த மாலையின் மூன்றாம் திருப்பாடல்,

“சீலம்இன்றி நோன்பின்றிச் செறிவேஇன்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்துகிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி வாரா உலகம் நெறியேறக்
கோலம் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே”

என்று பாடப்பட்டுள்ளது. இப்பாடலின் கருத்துத் தமக்கு நால்வகை நெறிகள் இல்லையாயினும் இறைவன் தமக்கு உள்ள பெருங்கருணையினுல் தம்மை ஆட்கொண்டு விட்டான் என்பதாகும். நான்கு நெறிகளாவன நல்லொழுக்கம், நோன்பு, அன்பு, அறிவு என்பனவாகும். இவ்வாறு இத்திருப்பாடலில் உள்ள சீலம், நோன்பு, அறிவு செறிவு என்னும் சொற்களைக்கொண்டு பொருள் கண்டாலும், சிவநெறியடைதற்குச் செம்மை சான்ற நெறிகளாக அமைந்தவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவே என்பதைத் தம் நுழைமாண்

நுண்புலனால் மணிமொழியார், அந்தச் சீலம், நோன்பு, செறிவு, ஞானம் என்ற சொற்களாலேயே குறிப்பிட்டருளினர் எனில், அவரது பேரறிவின் பேராற்றலை எங்ஙனம் வியப்பது ?

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

என்பது கோயில் மூத்த திருப்பதிக முதற் செய்யுள். இச் செய்யுள் தன்னகத்தே இறைவனுக்குரிய மகா மந்திர மாகிய சிவாயநம என்னும் மந்திரத்தின் உள்பொருளை கொண்டுள்ளது. எங்ஙனம் அம்மந்திரப் பொருள் இப் பாடலில் பொருந்தியுள்ளதென்பதைச் சிறிது பார்ப்போமாக.

இறைவனுக்குரிய மகா மந்திரங்களுள் தலை சிறந்தது, ஐந்தெழுத்தாலாகிய மந்திரமாம் சிவாயநம என்பது. இந்த ஐந்தெழுத்தாலான மகாமந்திரத்தின் சப்தார்த்தம், "பிரம்மா விட்டுணுக்கள் முதலாயுள்ளார், நமக்கரிக்கைத் தேவனாயுள்ளான் நின்மலனாகிய சிவன். அவன் பொருட்டு, நமக்காரம்" என்பது. மேலும் ஒவ்வோர் எழுத்தும் வேறு பொருள் தரும் சிறப்பு எழுத்தாகவும் அமைந்துள்ளது.

சி என்னும் எழுத்துச் சிவத்தையும், வா என்னும் எழுத்து அருளையும், ய என்னும் எழுத்து ஆன்மாவை யும், ந என்னும் எழுத்து மறைப்பையும், ம என்னும் எழுத்து மலத்தையும் அறிவித்து நிற்கின்றன என்று அறிஞர் கூறிவந்துள்ளார். இந்த மகா மந்திரத்தின் எழுத்துக்களையே மணிமொழியார், "உடையாள் உன் தன் நடுவிருக்கும்" என்னும் திருப்பாடலில் இலைமறை காய்

போல் இணைத்துப் பாடியுள்ளார். "உடையாள் உன்றன் நடுவிருக்கும்," என்பது வகரத்தையும், "உடையாள் நடுவுள் நீ இருத்தி" என்பது சிகரத்தையும், அடியேன் நடுவுள்" என்பது யகரத்தையும், "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்பதனுல், மறைப்பையும், மலத்தையும் ஒழித்து அருளைப் புரியாய் என்று கூறி நகர, மகர எழுத்துக்களின் நினைப்பையும் நமக்கு அறிவித்து நிற்பதைக் காணலாம். முதலில் இம் மகா மந்திரத்தைத் நாமே உச்சரிக்க மேற்கொள்ளாது, குருமுகமாக உபதேசம் பெற்றுப் பின்னர் உச்சரிக்க வேண்டும் என்பதற்காகச் சிவாயநம என்று அம் மந்திரத்தையே வெளிப்படையாக அமைத்துப் பாடலைப் பாடாது,சிவாயநம எனும் எழுத்துக்களைக் குறிக்கக்கூடிய கருத்துடைத் தொடர்களைப் பொருத்திக் காட்டினர் என்க. எந்த அளவுக்கு இவர் பேரறிவும் பேரருளும் பெற்றிருந்தால், இவ்வாறு பாடமுடியும் என்பதை நாம் சிறிது சிந்தித்தாலே மணிமொழியாரது புலமைப் பெருக்கு நன்கு புலனுகும்.

திருக்கோவையாரின் முதல் பாடல்,

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்
துருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே

என்பது. இப்பாடலில் குறிப்பிடப்பட்ட தாமரை, காவி, குமிழ், கோங்கு, காந்தள் ஆகிய ஐவகை மலர்கள் முறையே, மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சி ஆகிய ஐவகை நிலங்களில் தோன்றுமலர்கள் ஆதலின், அவற்றை ஒருங்கே ஈண்டுக் கூறக்காரணம், ஐவகை

நிலங்களிலும் சென்று துய்க்கக்கூடிய இன்பத்தைத் தில்லைக்கண் வாழ்வார் ஆண்டிருந்துகொண்டே துய்க்க வல்லவர் என்பதைக் காட்டற்கு என்றும், தாமரை, திருவளர் என்றும், காவிகள் சீர்வளர் என்றும், பூங்குமிழ் குருவளர் என்றும், காந்தள் பைங்காந்தள் என்றும், அடைகொடுத்துப் பாடி, கோங்கு மலர்க்கு எந்தவித மான அடையும் கொடுத்து மணிமொழியார் பாடாமைக் குரிய காரணம், தாமரை முகத்திற்கும், காவிகள் கண் களுக்கும், குமிழ் மூக்கிற்கும், காந்தள் கைகளுக்கும் உவமைப் பொருளாக இருப்பதுபோல், கோங்கு என்பது முலைக்கு உவமையாக இருத்தலின், இயற்கையிலேயே அழகுபெற்ற அக்கொங்கையின் ஏற்றத்தை விளக்கி நிற்கவே அடைகொடாது பேசினர் என்றும், அங்ஙனம் அடைகொடுப்பின் ஏனைய உறுப்புக்களைப்போல இத் தனங்களும் ஓர் உறுப்புத்தானே என்று கருதப்பட்டு அவற்றின் மேன்மை புலப்படாமல் போகும் என்று கருதியே அடைகொடுத்துப் பாடிற்றிலர் என்றும் பொருள் விளக்கம் காட்டிச்சென்றனர் பேராசிரியர். இவ்வாறே திருக்கோவையாரின் ஈற்றுச் செய்யுளாகிய

காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணர்ஒக்கல்
சீரணி சிந்தா மணிஅணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சம் நிதிவி திசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே

என்னும் பாடற்குப் பொருள் எழுதுங்கால், ஊரணி வேண்டாமைக் கொடுத்தலின் காரோடொக்கும் என் றும், வேண்டக் கொடுத்தலின் அழகிய கற்பகத்தோடு ஒக்கும் என்றும், நுண்ணிய கல்வியறுகலின், கற்றவர்க்கு

நல்ல உசாத்துணை என்றும், இசையுணர்வானும், கெழு தகைமையானும் பாணர்க்கு அவர் சுற்றத்தோடொக்கும் என்றும், நினைத்தது கொடுத்தலின் சீரையுடைய நல்ல சிந்தாமணியோடொக்கும் என்றும், அழகிய தில்லைச் சிவனடிக்குத் தாராகி அவனால் அணியப்படும் கொன்றைப் பூவின் தன்மையுடையவன் என்றும், சான்றோர் தமக்குத் தொலையாத நிதியாய் இருத்தலின் சங்க நிதியோடு ஒக்கும் என்றும், நட்டார்க்கும் பகைவர்க்கும் தப்பாது பயன்கொடுத்தலின் விதியோடொக்கும் என்றும், சுற்றத்தார்க்கு அவர் வேண்டிய செய்ய இருத்தலின் அணித்தாகிய ஊருணியோடு ஒக்கும் என்றும், அதனால் வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெரும்பயன் என்றும், நன்கு விளக்கிச் சென்றார் உரையாசிரியராம் பேராசிரியர்.

இங்ஙனமெல்லாம் உரை கூறற்குக் காரணம் மணிமொழியார் மொழிகளில் பொருள் செறிவு இருத்தலினால் அன்றோ? அவரது கவிகள் பொருள் செறிவுடையன என்பதை நம்பியாண்டார் நம்பிகள்,

> வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத்
> திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
> பொருளார் தருதிருக் கோவைகண் டேயும்மற் றப்பொருளைத்
> தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே.

என்று பாடி அறிவித்தார்.

கற்பனைக்கு ஊற்றும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் "பாவெனப்படுவது உன்பாட்டு" என்று மணிமொழியாரை நோக்கி வியந்து போற்றியுள்ளார்.

இன்னோரன்ன பற்பல காரணங்களால் மணிமொழியார், தலைசிறந்த புலவர் என்பதில் ஐயமில்லை. எனவே, புலமையொடு, அடியாராகவும் துலங்கிய காரணத்தால் பொய்யடிமையில்லாத புலவர் எனப்பட்டார் என்க.

இதுவரையில் கண்ட உண்மைகளால் சேக்கிழார் பெருமானார் பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் திருவாதவூரரே என்று கருதியுள்ளார் என்பது உறுதியாயிற்று.

# திருவாசகமும் பெரிய புராணமும்

சேக்கிழார் தாம் திருவாசகத்தினை நன்கு ஓதி உணர்ந்த நிலையினைத் தம் நூலில் பல்வேறு இடங்களில் காட்டியுள்ளார். எங்ஙனம் காட்டியுள்ளார் என்பதை இனி எடுத்துக் காட்டுவோமாக.

சேக்கிழார் பெருமானார் முன்னோர் மொழி பொருளே அன்றி, அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவார் என்னும் மொழிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாவார் என்பதையும் நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

சேவையர் காவலர் திருவாசகத்தின் அருஞ்சொற் றொடர்களை எம்முறையில் எங்கெங்கு எடுத்து ஆண்டுள் ளார் என்பதைக் காணின் உண்மை புலப்படும்.

சண்டேசுர நாயனார் இறை அன்பில் ஈடும் எடுப் பும் அற்ற நிலையில் திளைத்திருந்தவர். 'அதன் காரண மாகத் தாம் பூசை புரிந்து கொண்டிருக்கையில் இறை வருக்குரிய முழுக்கின் பொருட்டுக் குடங்கள் நிறையப் பாலை நிரப்பி வைத்திருந்தபோது, அவற்றைச் சண்டே சுரரின் தந்தையான எச்சதத்தன் என்பான் தன் காலால் உதைத்து அக்குடங்களில் இருந்த பாலினைக் கீழே வீணே போகுமாறு செய்தான். இந்த அளவிலும் நில்லாமல், சண்டேசுரர் பூசைபுரிந்த சிவலிங்கப்பெரு மானையும் தன் காலால் உதைத்துள்ளான் என்பது சுந்தரர் திருப்பாட்டு நன்கு உணர்த்துகிறது. அதாவது,

> ஏத நன்னிலம் ஈரறு வேலி ஏயர்கோன் உற்ற
> இரும்பிணி தவிர்த்துக்
> கோத னங்களில் பால்கறந் தாட்டக் கோல வெண்மணல்
> சிவன்தன்மேல் சென்ற

தாதை தாளற எறிந்தசண் டிக்குன் சடைமிசைமலர்
அருள்செயக் கண்டு
பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன் பூம்பொழில்திருப்
புன்கூர் உளானே

என்பதாம்.

உதைத்தது பாவம் அன்றோ? அதுவும் சிவ பூசையில் தேக்கித் திளைக்கும் சண்டேசுரரைத் தனக்குத் திருமகனுராக வாய்க்கும் பேறுபெற்ற தந்தை இப்படிச் செய்யலாமா? இதனுல்தான் சேக்கிழார் பெருமான் இவ்வெச்சதத்தன் இயல்பை நன்கு அறிந்து இவனைப்பற்றிக் கூறத் தொடங்குங் காலத்து,

அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம் எச்சதத்தன் உளனுனன்

, என்று சுட்டி அருளினுர். ஈண்டுச் சேக்கிழார் பெருமானுரின் உவமைப் பொருத்தத்தையும் நன்கு சிந்தித்துப் பார்த்த பின்பே மேலே செல்லுதல் வேண்டும். இவ்வெச்சதத்தனே அரவினுக்கு உவமை கூறி, அவ்வரவு நல்ல மாணிக்கத்தைத் தருவதுபோல இவ்வெச்சதத்தனும் அருமையினும் அருமையான மாணிக்கமாகிய சண்டேசுர நாயனுரைச் சைவ உலகிற்குத் தந்தான் என்றுலும், புயங்கம் அருமை மணியினைக் கொடுத்தாலும் நஞ்சினையும் நல்கவல்லது போலவே, இவ்வெச்சதத்தன் நஞ்சுபோன்ற கொடுமையினைச் செய்தவன் (அதாவது சிவனையும் சிவ பூசைக்குரிய பாற்குடங்களையும் தன் காலால் இடறினவன்) என்பதை உட்கொண்டே இவ்வாறு அவன் இயல்பை எடுத்துக் காட்டினர் புலவர். அத்தகையவன் தமக்குத் தந்தை முறையினனே ஆயினும், செய்த செயல் அடாத செயல்

ஆதலின், எந்தக் கால் பாற்குடங்களையும் இறைவனையும் உதைத்துத் தள்ளினதோ அந்தக் காலை வெட்டி வீழ்த்தினர் நாயனுர். தீமை செய்தவர் சிறந்தவர், பிறந்த உற்ருர், தாயார், தந்தையராக இருப்பினும் அவர்களைத் தண்டித்தல் முறை என்பது நீதி நூல் தருமம் என்பதை விபீடணன் கும்பகர்ணனுக்குக் கூறும்போது கூறியதாகக் கம்பரும்,

*தீயவை செய்வ ராகில் சிறந்தவர் பிறந்த உற்ருர்*
*தாயவை தந்தை மார்என்று உணர்வரோ தருமம் பார்ப்போர்*

என்று செப்பியுள்ளார். ஆகவே, சண்டேசுரர் செய்த செயல் தகாத செயல் அன்று. தக்க செயலே. தக்க செயலாக இருந்திலதேல், இறைவனுர் தாதை தாள் எறிந்த தண்டியாரைத் தம் மகனுராக ஏற்றுக் கொள்வரோ? ஏற்றுக்கொண்டு தம் திருவாக்கால்,

*தொடுத்த இதழி சூழ்சடையார்*
*துணைத்தாள் நிழல்கீழ் விழுந்தவரை*
*எடுத்து நோக்கி, "நம்பொருட்டால்*
*ஈன்ற தாதைவிழ எறிந்தாய்*
*அடுத்த தாதை இனிஉனக்கு*
*நாம் "என்று அருள்செய்து அணைத்தருளி*
*மடுத்த கருணை யால்தடவி*
*உச்சி மோந்து மகிழ்ந்தருள.*

என்று கூறியதோடும் தழுவியதோடும் நில்லாமல், மேலும்,

*அண்டர் பிரானும் தொண்டர்தமக்கு*
*அதிபன் ஆக்கி அனைத்தும்நாம்*
*உண்ட கலமும் உடுப்பனவும்*
*சூடு வனவும் உனக்காகச்*

சண்டீ சனுமாம் பதம்தந்தோம்
என்றங் கவர்பொன் நடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

இந்தச் செயல்கள் அனைத்தையும் போற்றி, இறைவருக்குப் பல்லாண்டு பாடிய சேந்தனார், ஒன்பதாம் திருமுறையில் திருப்பல்லாண்டு பதிகத்தில்,

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாத கத்துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

என்று பாடிப் பரவசமுற்றார். எனவே, சிவனடியவர்கள் செய்வன அனைத்தும் அவச்செயல் அல்ல; தவச்செயலே ஆகும். இதனை நன்குணர்ந்த மணிமொழியார் தம் மணி வாயால், திருவாசகத் திருத்தோணோக்கப் பகுதியில்,

புத்தன் முதலாய புல்அறிவில் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ

என்று பாடி அருளிய அருளிப்பாட்டினைச் சேக்கிழார் பெருமானார்,

வந்த மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்
இந்த நிலைமை அறிந்தார்ஆர் ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றோ சாற்றுங்கால்

என்று பாடித் தம் நூலில் அமைத்துக் கொண்டனர். செய்தனவே தவமாக்கும்' என்னும் தொடர் வேறு

எந்த நூலிலும் காணப்படாததொன்று. திருவாசகத்தில் மட்டும் வந்துள்ள தொடராகும். அத்தகைய அருந்தொடரைச் சேக்கிழார் தம் பெருநூலில் எடுத்துப் பேசிக்கொள்வதற்கு வாய்ப்புத்தந்தது திருவாசகமே அன்றோ?

மேலும், மாணிக்கவாசகப் பெருமானும், இறைவர் தம் அடியார் செய்வனவற்றைத் தவமாக்கும் இயல்பினர் என்பதைப் பொதுப்படக் காட்டி அதற்கு எடுத்துக்காட்டுச் சண்டேசுர நாயனார்தாம் என்பதை உணர்த்துவார்போல, 'புத்தன் முதலாய்' என்ற பாட்டிற்கு அடுத்ததாக,

> தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
> சாதியும் வேதியன் தாதைதனைத் தாள்இரண்டும்
> சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
> பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்

என்று சண்டேசுரரது சீரிய செயலைக் குறித்துப் பாடியுள்ளார். இந்தக் குறிப்பின் நுண்பொருளை யுணர்ந்தே சேக்கிழார் பெருமானார் சண்டேசுரர் புராணம் பாடுங்கால் மணிமொழியார் குறிப்பிட்ட 'செய்தனவே தவமாக்கும்' என்னும் தொடரையே 'செய்தனவே தவமாம்' என்று கூறி அமைத்துக் கொண்டனர்.

திருவாதவூரர் இறைவரை உள்ளங்குளிர விளிக்கும் பகுதிகள் ஆண்டவன் பெருமையினை அறிவிக்கும் நிலையில் காணப்படும். அவற்றிற்குரிய இடங்கள் பலவாக இருந்தாலும், ஓர் இடத்தில் சிவபெருமானை விளித்துத் தமக்கு இறைவர் அருள் புரிந்த பேர்அருள் திறத்தைக் குறிப்பிடும்போது,

குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்துஎன்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே நீஎன் உடல்இடம் கொண்டாய்
இனிஉன்னை என்இரக் கேனே

என்று பாடிப் பரவசமுற்றுள்ளார்.

குன்றைக் கோமகனார் மணிமொழியார் மணித் தொடராகிய "கோதிலா அமுதே" என்னும் சீரிய தொடரை எங்கு அமைத்துப் பெருமை பெறலாம் என்று நன்கு சிந்தித்தனர். இறைவர் பெயரையோ, அவரைக் குறிக்கும் தொடரையோ பெரியபுராணத்தில் அமைத்துப் பேசாத இடமே இல்லை: அந்நூல் கண்ணுதல்பெருமானாரது கருணைத்திறனும், அடியவர்களின் அன்பின்மேம்பாடும் தோன்றப்பாடப்பட்ட நூலன்றோ? அத்தகைய சீரியநூலில் இறைவனை அறிவிக்கும் தொடர்கட்கு இடம் இல்லாமல்போகுமா? போகாதன்றோ? என்றாலும், ஆன்றோர் வாக்கினைத் தக்க இடத்தில் வைத்துத் தானே அமைத்துப் போற்றவேண்டும்? ஆன்றோர் மொழிகளையும் தொடர்களையும் தக்க இடத்தில் வைத்துப் போற்றக்கூடியவர் என்பதற்குச் சான்று சேக்கிழார் பெருமானார் முழுமுதல் பரமன் மொழியான "உலகெலாம்" என்னும் தொடரைத் தம் நூலில் மூன்றிடத்து வைத்த முறைமையே போதியதன்றோ? அம் மூன்று இடங்கள்: தம் நூலின் முதல் செய்யுளாகிய,

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்

அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

என்ற இடத்தில் முதலிலும், தோணிபுரத் தோன்றலாம் ஆளுடைய பிள்ளையார் இறைவர் தமக்கு அளித்த முத்துச் சிவிகையில் இவரும் சமயம், தம் நூலில் இடைப்பகுதியில் வரும் கட்டமாக அமைதலில் அவ்விடத்தும் அவ்வுலகெலாம் என்னும் மெய்ம்மொழியினை,

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்று
ஆதி யாரரு ளாதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்

என்று இயைத்தும், தம் நூலின் இறுதியிலும், அவ்விறைவரின் அமுத வாக்கினை,

என்றும் இன்பம் பெருகும் இயல்பினோடு
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யார்அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

என்றும் பாடி அமைத்துள்ளார் அல்லவோ? அத்தகைய அறிவு மதுகை அமையப் பெற்றவர் 'கோதிலா அமுதே என்று திருவாசகத்தில் காணப்படும் தொடரை ஆளுடைய நம்பிகளது வரலாற்றுப் பகுதியில், அந் நம்பிகள் இறைவரால் மணப்பந்தலில் தடுத்தாட் கொள்ளப்பட்டு, அவர் பின்னர்ச் சென்று திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறைத் திருத்தளியில் புகுந்தபோது இறைவர் அம்மை அப்பராய்க் காட்சி அளித்து, நம்பியாரூரரை நோக்கி,

மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன்
என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய
சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால்
மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை
பாடும் வாயார்.

என்று பணித்தருளிய நிலையில் வன்தொண்டப் பெருந் தகையார் மறுமொழியாக,

வேதிய னாகி என்னை வழக்கினால்
வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக்கு உணர்வுதந்து
உய்யக் கொண்ட
கோதிலா அமுதே இன்றுஉன் குணப்பெருங்
கடலை நாயேன்
யாதினை அறிந்துஎன் சொல்லிப் பாடுகேன்
எனமொ ழிந்தார்.

மணிமொழியாரும் இறைவர் தம்பொருட்டுக் குருவடிவம் தாங்கித் திருப்பெருந்துறையில் குருந்தமரத்து அடியில் அமர்ந்து தம்மை மாணவர் குழாத்து ஒருவராய் ஏற்று அருளிச்செய்த அருளினைப் போற்றிப் பாடிய பாடலை முன்னர்க் குறிப்பிட்டோம். ஈண்டும் நாவலர் பெருமான் இறைவரால் தம் திருமணம் தடுக்கப்பட்டு ஆட்கொள் ளப்பட்ட அருளினைப் போற்றியே இங்ஙனம் கேட்டுக் கொண்டனர். இவ்விரு பாடல்களிலும் "என் இரக் கேனே" என்னும் வினாவும், "என் சொல்லிப் பாடு கேன்" என்னும் வினாவும் பொருந்தி இருக்கும் ஆற்றை யும் உன்னிப்புடன் பார்த்தல் வேண்டும். பாடுகேன்,

இரக்கேன் என்னும் இரு எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்றுக்களும் ப், வ் என்னும் எதிர்கால இடைநிலைகளைப் பெற்று அமையாமல் க் என்னும் அரிதாக வரப்பெறும் எதிர்கால இடைநிலையினைப் பெற்று வந்துள்ளமையினையும் அறிஞர்கள் சிந்திப்பார்களாக. இவ்வாறான பொருத்தங்கள் இவ்விருபாடல்களிலும் பொருந்தி இருப்பதனால்தான்,

கோதிலா அமுதே அருள்பெருகு கோலமே இமை
யோர்தொழு கோவே
பாதி மாதொரு கூறுடை யானே பசுபதீபா
மாபர மேட்டீ
தீதி லாமலே யேதிரு அருள்சேர் சேவகா திரு
வாவடு துறையுள்
ஆதி யேஎனை அஞ்சல்என் றருளாய் ஆர்எனக்குறவு
அமரர்கள் ஏறே

என்ற சுந்தரர் திருப்பாட்டினைத் தழுவிச் சேக்கிழார் தம் பாட்டினைப் பாடியுள்ளார் என்று கருதுதற்கு இல்லை. மணிமொழியார் மொழிகளை உட்கொண்டே பாடியருளினர் என்றே கருதவேண்டி இருக்கிறது. இவ்வெடுத்துக் காட்டுச் சேக்கிழார் பெருமானார் மணிமொழியாரது சொல்லிலும் தொடரிலும் ஈடுபட்டுள்ள இயல்பின் மாட்சியினைக் காட்டுகிறது.

"தேனுந்து" என்னும் தொடர், திருவாசகமாம் பெருநூலில் காணப்பெறும் ஓர் அரிய தொடர். அதனை வாதவூர் அடிகளார் திருக்கோத்தும்பி என்னும் தலைப்பின்கீழ் பாடியுள்ள பாடல்களின் ஒன்றில், இறைவர் தம்மை ஆட்கொண்ட பெருங்கருணையினைப் பாராட்டிப் பேசுகையில்,

நானும்என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்
தானும்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாக்கடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ

என்று உளங்கனிந்து உரைத்தருளினார்.

இவ்வருமைத் திருப்பாட்டில் இறைவன் திருவடி தேனுந்து என்றும் அடைகொடுத்துச் சிறப்பித்துப் பாடியிருப்பதைப் படிக்கும்தோறும் நம் நாவிலும் தேன் ஊறுகிறதல்லவா? திருவாசகமே தேன்தானே! அதனால் அன்றோ,

தொல்லை இரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

என்ற அருமைப் பாடலும் எழக் காரணமாயிற்று? இந்தத் தேனுந்து என்னும் தேன்போல் இனிக்கும் தொடரினைச் சேக்கிழார் பெருமானார், எத்தகைய சந்தர்ப்பத்தில் எடுத்து ஆண்டுள்ளார் என்பதைச் சிந்திக்கும்போதுதான் அவரது பேர் அறிவுத்திறன் பெரிதும் விளக்கமாகிறது.

ஆளுடைய அரசு முன்னை விதிப்பயனால் சிலகாலம் சைவசமயம் தணந்து சமண்சமயம் புகுந்து வாழ நேர்ந்தது என்றாலும், திலகவதியார் துணையினால் மீண்டும் சைவசமயம் புக்கு இன்புற வாய்ப்புக் கிடைத்தது. இதற்கிடையில் "நம் சமயத்தில் புகுந்து இருந்தவர், மீண்டும் தம் பழைய சைவசமயத்தினைச் சார்ந்துவிட்டனரே! அத்தகையவரை உயிருடன் வைப்பின், நம் சமயத்திற்கே தீங்கு உண்டாகும்" என்று கருதிய சமணர்கள்

அரசனைக் கொண்டு அப்பர் பெருமானை வரவழைத்து, அவரைக் கொன்றுபோட நீற்றறையில் ஏழுநாள் அடைத்துப் போட்டனர். அதனையும் அன்புடன் ஏற்று அப்பர் பெருமானார் அவ்வறையினை இன்பிடமாகக் கொண்டு இனிது இருக்கலாயினர். அவ்விடம் இன்பிடமாக இருந்தது என்பதை அவரது இன்புரையாகிய

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்ற திருக்குறுந்தொகைப் பாடலே சான்றாக நின்று அறிவிப்பதாகும்.

இந்தக் கட்டத்தினைக் குறிக்கும் இடத்தினையே திருவாசக அருந்தொடரான "தேனுந்து" என்பதை அமைத்துப் பேசுதற்குரிய இடமாகக் கருதினர் சேவையர் காவலர். கருதியவர்,

ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டே
ஈனந்தான் கியதிலதாம் என்ன அதி சயம்என்றார்

என்ற பாடலில் இறைவர் மலர்ப்பாதத்தினைத் தேனுந்து என்று அடை கொடுத்துப் பாடிமுடித்தார்.

மணிமொழியார் தொடர், தேனுந்து சேவடி என்பது. பணிமொழியார் தொடர், தேனுந்து மலர்பபாதம் என்பது. ஆ! எவ்வளவு நுட்பமாகச் சேக்கிழார் பெருமானார் திருவாசகத்தினை ஓதிப் பயின்றிருக்கவேண்டும் பாருங்கள்!

அழுதழுது அரனடிக்கே அன்பு பூண்டவர் ஆளுடைய அடிகளார் என்பது அகச் சான்றாலும் புறச் சான்றாலும் புலனாகும் ஓர் உண்மையாகும். 'அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க்கடிமை செய்வாம்' என்ற பரஞ்சோதியார் கூற்றாலும்,

பெருந்துறையில் சிவபெருமான் அருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர்
அடிகளடி இணைகள் போற்றி

என்ற சிவஞான முனிவர் மொழியாலும்,

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேர்அருள் பெற்றும் பெறாரின் அழுங்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பை நீயே

என்னும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் மொழியாலும், புறச்சான்றுகள் உள்ளமை கொண்டு நிறுவிக் காட்டலாம். அகச்சான்றாக அனேக சான்றுகளைத் திருவாசகத்தினின்றும் காட்டலாம். அழுதால் தான் அரன் அருளைப் பெற முடியும் என்ற முடிந்த முடிபுடையவர் திருவாதவூரர் என்பதை அவரது வாக்காகிய,

யானே பொய்என் நெஞ்சம் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே

என்ற ஒன்றே போதுமானது. அரனார் அருளை அழுகை யால் பெறும்பொழுது, தாம் உறும் மெய்ப்பாட்டினைக் கூறுவாராய்,

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி
சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ, விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே

என்று கனிந்து மொழிந்துள்ளார்.

இம் மணிமொழியார் திருப்பாடலில் காணப்படும் விதிர் விதிர்த்து என்னும் தொடரில் கருத்து ஊன்றியது சேக்கிழார் பெருமானார்க்கு. அத்தொடரை ஆண்டு கொள்ளுதற்குரிய இடத்தினைத் துருவலானார். உயர்ந்த மணியினை உகந்த இடத்தில் பதியவைத்தால் தானே அதற்குரிய பெருமை தந்ததாகும்? அதுபோல் விதிர் விதிர்த்து என்னும் தொடரினைத் தக்க இடத்தில் அமைப்பதுதானே சிறப்புடையதாகும். ஆகவே, மணி மொழியார் எப்படி ஆண்டவன்முன் இத்தகைய மெய்ப் பாட்டுக் குறிகளுடன் இருந்து முறையிட்டுக்கொண் டனரோ, அதுபோலவே அரனார் அன்பராம் ஆளுடைய அரசுகள், திருஒற்றியூர் எழுத்தறியும் பெருமானார் முன் நின்று அவரது திருக்காட்சியினைக் கண்டு பரவசமுற்று நின்ற நிலையினைக் குறிப்பிடும் அமயத்தில்,

எழுதாத மறைஅளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வம் உறநிலத்தில் தோய்ந்தெழுந்தே அங்கமெலாம்

முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார்

என்று பாடி அமைத்தார்.

இப் பெரிய புராணப் பாடல் மணிமொழியாரது விதிர் விதிர்த்து என்னும் தொடரை மட்டுமா கொண்டுள்ளது? "மெய்தான் அரும்பி" என்னும் பாட்டின் சாரத்தினை அன்றோ அப்படியே தன்னகத்தே கொண்டுள்ளது? "முகிழ்த்த மயிர்க்கால்" என்பது "மெய் தான் அரும்பி", என்ற தொடரின் கருத்தன்றோ? "விழுதாரை கண்பொழிய" என்னும் தொடர் "கண்ணீர் ததும்பி" என்னும் தொடர்ப் பொருளன்றோ?

அடுத்தபடியாக அன்புருவான அருண்மொழித் தேவர், அரனார் அன்பரான வாதவூர் பெருமானார் வாக்கில் அமைந்த கருத்துக்களை எம்முறையில் தம் நூலில் எடுத்தாண்டுள்ளார் என்பதையும் சிறிது சிந்திப்போமாக.

சேக்கிழார் பெருமானார் முன்னோர் மொழிபொருளை வெகு நுட்பமாகக் கையாளுவதில் பெருஞ் சமர்த்தர் என்று கூறினோம் அன்றோ? இதற்கு ஓர் எடுத்துக் காட்டினை ஈண்டு எடுத்து இயம்பின் அது இன்பம் தருவதாகும்.

மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில், நாயனாருடைய வாழ்க்கைத் துணைவியார் இயல்பினைச் சுருக்கமாகச் சொல்ல வருகிறார் சேக்கிழார். அப்படிச் சொல்ல வந்த சமயம் அவ்வம்மையார் பிள்ளைப் பேற்றை எய்திய அமையம். அதனை அழகுறத் தெரிவிக்க எண்ணியவர்,

குழைக்கலையும் வடிகாதில் கூத்தனார் அருளாலே
மழைக்கீந்தவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்கும்நெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்

என்று தெரிவித்தனர்.

இப்பாடலில் மானக்கஞ்சாற நாயனாரின் வாழ்க்கைத் துணைவியார் இயல்பினைச் சுருங்கிய அளவில் தெரிவிக்கும் தொடர் மழைக்குதவும் பெருங்கற்பு என்பது. ஈண்டுக் குறிக்கப்பட்ட மழைக்குதவும் பெருங் கற்பு என்பதை எந்நூல் கருத்தைத் தழுவி எழுதியுள்ளார் சேக்கிழார் எனச் சிறிது சிந்தித்துப் பார்க்குங் காலத்துப் பொய்யில் புலவராம் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்துள்ள திருக்குறளில் காணப்படும் வாழ்க்கைத் துணைவி என்னும் அதிகாரத்தில் காணப்படும்,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறள் பொருள் முழுமையையும் தழுவிப் பாடியுள்ளார் என்பது தெரியவருகின்றதன்றோ? எனவே, சேவையர்காவலர் தம் சீரிய நூலில் மணிமொழியார் வாக்கின் கருத்துக்களையும் இம்முறையில்தான் நுட்பமாக எடுத்தாண்டுள்ளார். அவ்விடங்களை இனிக் காண்போமாக.

திருவாசகத்தில் பிடித்த பத்தில்,

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

என்ற வாசகத்தில் இறைவனது இன்கருணைத் திறத்தை வியந்து பேசவிரும்பிய மணிமொழியார், தாயினும் அன்

புண்டிய கருணையைக் காட்டுபவன் இறைவன் என்று கூறிப் போந்தார். இந்தக் கருத்தினையே சேக்கிழார் பெருமானார் தடுத்தாட்கொண்ட புராணத்தில், இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பிறகு, நாவலூரர்ப் பெருமானார் நாரிபாகரைத் தம் திருப்பாட்டாகிய "பித்தா பிறைசூடி" என்னும் பதிகம் பாடி இவ்வுலகம் உய்ய அருளிச் செய்தார் என்ற இடத்தைச் சுட்டிக் காட்டும்போது,

கொத்தார்மலர்க் குழலாளொடு கூறாய் அடியவர்பால்
மெய்த்தாயினும் இனியானை அவ் வியனாவலர் பெருமான்
பித்தாபிறை சூடிஎனப் பெரிதாம் திருப்பதிகம்
இத்தாரணி முதலாஉல கெல்லாம் உயஎடுத்தார்

என்று உரைத்தருளினர். இப்பாடலில் வந்துள்ள "மெய்த்தாயினும் இனியானை" என்னும் தொடர், "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்னும் அடியினைத் தழுவிய கருத்துடைய தொடர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென உணரப்படுகின்றதன்றோ?

மணிமொழியார் மணிவார்த்தைகளில் அடங்கிய பாடல்களில் ஒன்று;

விச்ச தன்றியே விளைவு செய்குவாய்
　　விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
　　புலைய னேனையுன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பருக்
　　குரியன் ஆக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னுங்கொலார்
　　நானும் அங்ஙனே உடைய நாதனே

என்பது. இப்பாடல் பொருள் முழுமையையும் நாம் ஈண்டுச் சிந்திக்கவேண்டுவதன்று. இப்பாடலில் காணப்

படும், "வைச்சு வாங்குவாய்" என்னும் தொடர்ப் பொருளை மட்டும் நம் நினைவில் கொண்டு, இத்தொடர்ப் பொருள் கருத்தினைச் சேக்கிழார் பெருமானார் எம்முறை யில் தம் நூலில் கூறுகிறார் என்பதை மட்டும் கவனிப் போமாக.

திருநீலகண்ட நாயனார், அரனார் அன்பர்கட்குத் திருவோடு அளிக்கும் திருத்தொண்டு செய்து வந்தவர். இத்தொண்டர் தம்பால் கொண்டுள்ள அன்பின் முதிர் வையும், தாம் கூறிய ஆணையின் வண்ணம் ஒழுகிய நிலை யினையும் உலகிற்குக் காட்டவிழைந்த இறைவனார் அடியவர் வேடம் பூண்டு நாயனார் இல்லம் போந்து, தம்மாட்டிருந்த திருவோட்டினை அவர்பால் தந்து, தாம் வந்து மீண்டும் கேட்கும் காலத்துத் தருமாறு பணித்துச் சென்றார். நாயனாரும் அடியார் ஆணைப்படி திருவோட் டினைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். என்றாலும் ஆண்டவன் ஆற்றல்முன் எவருடைய பத்திரம்தான் என் செய்ய இயலும்? எனவே, இறைவராம் அடியார் தாம் வைத்துச் சென்ற ஓடு மறையுமாறு திருஉளங் கொண்டார். அவ்வுளப்படி ஓடு மறைந்தது. அந்தத் தருணம் இறைவனார் நாயனார் இல்லம் போந்து, தாம் அளித்துச் சென்ற ஓட்டினைத் தருமாறு பணித்தார். அங்ஙனம் அடியாராம் இறைவர் எம்முறையில் பணித் தார் என்பதைக் கூறவருகின்றார் சேவையர்காவலர். அப்படிக் கூற வரும்போது,

வந்தபின் தொண்ட னாரும் எதிர்வழி பாடு செய்து
சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவம் என்று நிற்ப
முந்தைநாள் உன்பால் வைத்த மொய்யொளி விளங்கும் ஓடு
தந்துநில் என்றான் எல்லாம் தான்வைத்து வாங்க வல்லான்

என்று பாடி அருளினார்.

சீண்டுக் காணப்பெறும், "எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்" என்னும் தொடரின் திரண்ட கருத்து, முன்னர்க் காட்டிய, "விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்" என்ற தொடரில் குறிப்பிடப்பட்ட கருத்துப் பொருளன்றோ? மணிமொழியார் 'யாவையும் வைச்சு வாங்குவாய்' என்பதைத்தான் சேக்கிழார் பெருமானார், "எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்" என்று கூறியருளினர் என்க.

இறைவர் தம் அடியார்மாட்டு வைத்துள்ள அன்புக்கு அளவில்லை. அவர்கள்பொருட்டுத் தாம் எதையும் செய்ய முன்வருவர். அவரைத் தேடி அன்பர்களோ, அடியவர்களோ செல்லவேண்டியதில்லை. அவரே அவர்களின் இல்லங்கட்குச் சென்று அருள்புரிவர். இதற்குச் சான்றாகப் பல அடியவர்களின் வரலாறுகளைக் காட்டலாம். இப்படி அருளைச் செய்யவரும் இறைவர், தாம் எல்லாம் அறிந்தவராய் இருந்தும், "தாம் அடியவர் இல்லங்கட்கு நேரே வந்து அருள்புரியவல்லோம்" என்பதை மக்கள் அறிந்து உண்மை அன்பும், தொண்டும் மேற்கொண்டு ஒழுகவேண்டும் என்பதை அறிவிக்கத் தாம் போகவேண்டிய அடியவர் இல்லத்திறுக்கு நேரே செல்லாமல், வழியில் வருவார் போவாரை எல்லாம், "அடியவர் இல்லம் எங்கே?" என்று வினவிக்கொண்டே செல்வர். இதனைச் சிறுத்தொண்டர் வரலாற்றில் நன்கு காணலாம். இறைவர் சிறுத்தொண்டர், இல்லம் நோக்கி வருகிறார்: வருபவர் வழியில்,

> தண்டாத தொருவேட்கைப் பசியுடையார் தமைப்போலக்
> கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
> தொண்டனார்க்கு எந்நாளும் சோறளிக்கும் திருத்தொண்டர்
> வண்டாரும் தாரினார் மனைக்குள்ளா ரோஎன்ன

என்ற பாடலில் மேலே கூறிய குறிப்புக் காணப்படுவது கொண்டு தெற்றத் தெளிய உணர்கிறோம். இவ்வாறுன இறைவரது பொது இயல்பினை மணிமொழியார் தம் திருவாசகத்தில், மனம் கனிந்து,

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த அரிய கருத்தினை நம் சேக்கிழார் பெருமானார் தம் நூலிலும் பொதுப் பட இறைவர் தன்மையினை எடுத்துப் பேசுமிடத்து,

மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
"வென்றஐம் புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால்
என்றும்இவ் இளமை நீங்காது" என்றெழுந் தருளி னாரே

என்று பாடியுள்ளார். இப்பாடல் திருநீலகண்ட நாயனார் புராணத்தில் வரப்பெற்றது. ஒரு நாயனார் வரலாற்றுப் போக்குடன் இணைத்து, அரனார் அடியவர் இல்லம் சென்றார் என்று கூறப்பட்டிருக்குமானால், அது மாணிக்கவாசகனார் கருத்தை ஒட்டிச் சேக்கிழார் பாடியுள்ளார் என்று கூற இயலாது. ஆனால், ஈண்டு எடுத்துக் காட்டியுள்ள திருவாசகப் பாடலும், திருத்தொண்டர் புராணப் பாடலும், இறைவரது பல்வகை அருளுடைய இயற்கைச் செயல்களுள், அடியவர் இல்லங்கட்குச் சென்று

அருள் புரியும் கருத்தினைப் பொதுப்படக் கூறியிருப்பதனால் இங்கு எடுத்துக் காட்டப்பட்டதென்க.

கண்ணப்ப நாயனார் வரலாற்றில் நாயனார் கன்னி வேட்டைமீது கருத்துக்கொண்டு, கானகம் சென்றவர் தாம் வேட்டவாறு வேட்டையாடிய பின்பு, தமக்கு முன்னால் மலை ஒன்று காண, அம்மலையினைக் கண்டு திரும்பத் தம் தோழனான நாணனுடன் புறப்பட்டுச் சென்ற நிலையினை ஆசிரியர் அருண்மொழித் தேவர் எழுதும்போது,

முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலாம் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்

என்று கூறித் திண்ணனாரிடத்து அமைந்த அன்பின் மாட்சியினை அழகுடன் எடுத்து மொழிந்தார். இத் தொடர்ப் பொருளை மணிமொழியார் வாசகத்தில் உள்ள,

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே

என்னும் பாட்டின் கருத்தைத் தழுவிச் சேக்கிழார் பெருமானார் பாடியுள்ளார் என்று கூறுவது பொருத்தமே அன்றோ?

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தமக்கு இறைவர் செய்த அருட்பெருங் கருணைகளையெல்லாம் அகம் கனிய எடுத்து மொழிந்துள்ளார். அப்படி இறைவர் தமக்குச் செய்த அருட்பெருங் கருணைகளுள் ஒன்று, அன்னாருடைய சித்த விகாரக் கலக்கங்களைப் போக்கித்தெளியச் செய்ததாகும். அதனைத் திருக்கோத்தும்பிப் பகுதியில்,

வைத்த நிதிபெண்டீர் மக்கள்குலம் கல்வியென்னும்
பித்த உலகில் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ

என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடலில் வரும் "சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த" என்னும் தொடர்ப் பொருள், திருத்தொண்டர் புராணத்துள் திருமூலநாயனார் வரலாற்றில் நாயனார் யோகநிலையில் அமர்ந்த நிலையினைக் கண்டவர் கூற்றாகக் கூறும்போது,

பித்துற்ற மயலன்று பிறிதொருசார் புளதன்று
சித்தவிகற் பங்களைந்து தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி வரம்பில்பெரு மையிலிருந்தார்
இத்தகைமை அளப்பரிதால் யாராலும் எனஉரைப்பார்

என்ற பாட்டில் இருப்பதைச் சிந்தித்தறியலாம்.

இது திருவாசகத்தின் பொருளினைத் தழுவியே கூறப்பட்டுள்ளது என்பது விளங்காமல் போகாது. ஞானநிலை முதிரப்பெற்றவர் திருமூலர். அத்தகைய பெரியாரது அனுபவ நிலையினைப்பற்றிப் பேசும்போது, அவரைப்போலவே ஞானநிலை பெற்றவர் கூறிய அனுபவ மொழிகளை இணைத்தே பேசவேண்டுவது சால்வும் பொருத்த முடைமையின், மணிமொழியார் வாசகப்

பொருளினை மாமூலனார் வாழ்க்கைக் குறிப்பில் இணைத்துப் பேசியது சேக்கிழாரின் அறிவின் ஆழத்தைப் புலப்படுத்துகிறது.

திண்ணனாராம் கண்ணப்ப நாயனார் திருக்காளத்தி மலையினைச் சார்ந்தார்; குடுமித் தேவரைக் கும்பிட்டார்; அவர் அன்பில் ஈடுபட்டார்; அவரைத் தணந்துவர விரும்பாராய் அல்லும் பகலும் அவரைவிட்டு அகலாது, (உணவு கொணரச் சென்றபோது மட்டும் தணந்து) காத்துநின்றார். இவ்வாறு அரிய இறைவரை எளிய முறையில் கண்டு ஆர்வம் பெருக நின்ற நிலைமையைப் பற்றிச் சேக்கிழார் பெருமானார் குறிப்பிட நேர்ந்தபோது,

சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற் கரியார் தம்மை
ஆர்வம்முன் பெருக ஆரா அன்பினில் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார்

என்று பாடிப் பரவசமுற்றார்.

இப்பாட்டின் முதல் இரண்டடிகள் இறைவரது அருமைப் பாட்டினை அறிவிப்பனவாகும். இறைவர், தவம் செய்துகொண்டு காட்டில் வாழும் வாழ்க்கையினை உடைய முனிவர்கட்கும் தேவர்கட்கும் காணுதற்கு அரியவர் என்பதே அவ்வருமைப்பாடு. இங்ஙனம் தவம் பல புரிந்தும் இறைவரைக் காணுதற்கு அரிது என்பதை அழகுற எடுத்துப் பாடியுள்ளார் திருவாதவூரர்.

அவர் பாடிய பாட்டு,

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டி யாய்அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணா
மன்ன! என்னையோர் வார்த்தையுள் படுத்துப்

பற்றினாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேன்இன்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

என்பது. இப்பாடலின் முதல் மூன்று அடிகளிலும் இறைவனைக் காணவேண்டும் என்ற அவாவுடையோர் புற்றுத் தம்மீது மூடும் நிலையிலும், மரஞ் செடி கொடிகள் முளைக்கும் நிலையிலும் அசையாது இருந்து, நீரையும் காற்றையும், உணவாகக் கொண்டு தவம் கிடந்தும் இறைவனைக் காணுதற்கு அரியர் என்ற கருத்தினை விளக்கிக்கொண்டிருப்பதைக் காண்க. இக் கருத்தும் சேக்கிழார் பெருமானார் கூறிய கருத்தும் ஒத்திருப்பதைக் காணும்போது, குன்றைநகர் கோமகனார் தமக்கு முன்பிருந்த பெரியார் வாக்கின் பொருளினைத் தழுவித் தாம் பாடியுள்ளார் என்பது புலனாகவில்லையா? எனவே; இக்கருத்தினைச் சேக்கிழார் திருவாசகத்தில் இருந்து எடுத்தார் என்பது சரதம் என்க.

தவசிகள் காடுகளில் சென்று கடுந்தவம் புரியும் நிலையினைப் பட்டினத்தடிகள் தம் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்,

மலர்தலை உலகத்துப் பலப்பல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ
மனையும் பிறவும் துறந்து நினைவரும்
காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்றும்
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்
சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும்

உடையைத் துறந்தும் உண்ணுது உழன்றும்
காயும் கிழங்கும் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்
களரிலும் கல்லினும் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித் தாங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்

என்று படம் பிடித்துக் காட்டுவார்போலும் காட்டியுள்ளார்.

இவ்வாருன தவசிகள் தவம் செய்யும் இயல்பு பட்டினத்தார் வாக்கில் பயின்றுவந்திருத்தலின், அப்பட்டினத்தார் சேக்கிழார் பெருமாஞர்க்கு முன்பு இருந்தவர் ஆதலின், அன்னூர் வாக்கினைத் தழுவி அருண்மொழித்தேவர் இங்ஙனம் " சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர்தாமும் கார்வரை அடவிசேர்ந்தும் காணுதற் கரியார் தம்மை" என்று கூறியுள்ளார் என்று ஏன் கூறக்கூடாது என்று ஐயங்கொண்டு வினவலாம். பட்டினத்தார் தவம் செய்வார் இயல்பினை எடுத்துக்கூறி "அம்மை முத்தி அடைவதற்காகத் தம்மைத்தாமே சாலவும் ஒறுப்பர்" என்று கூறி முடித்துள்ளனரே அன்றி, இவ்வாறெல்லாம் தவங்கள் செய்தும் இறைவரைக் காண இயலாது என்று கூறிற்றலர். ஆதலின், சேக்கிழார் பெருமான் இக்கருத்தினை மணிமொழியார் வாக்கினின்று பெற்ருர் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம்.

ஆளுடைய பிள்ளையாராம் ஞானசம்பந்தப் பெருமாஞர் அமைச்சர் குலச்சிறையாரும், அன்புடை அணங்கஞர் மங்கையர்க்கரசியாரும் விரும்பிய விருப்பத்திற்கு இணங்க ஆலவாய் அடைந்து மதிமுடி சொக்கன்

திருமுன் நின்று, ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி வணங்கி நின்ற நிலையினைப் பற்றிச் சேக்கிழார் பெருமானார் பாடும்போது,

அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும் திகழ்திரு மேனி
எங்கும் ஆகிநின் றேத்தினார் புகலியர் இறைவர்

என்று பாடி இன்புற்றார்.

இங்குப் பாலறாவாயர் அன்பின் முதிர்வால் ஆனந்தக் கண்ணீர் பொழிந்து, அந்நீர் உடல் முழுதும் தோய்ந்த நிலையில் வணங்கினார் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை நோக்கின், சேக்கிழார் பெருமானார்க்குத் திருவாசகத்தில் வந்துள்ள,

வெள்ளம்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம்தாழ் உறுபுனலில் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளம்தான் நின்றுஉச்சி அளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளம்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே

என்ற திருப்பாட்டின் நினைவுவர அப்பாட்டின் பொருளைத் தழுவி இங்ஙனம் தாமும் தம் நூலில் தோணிபுரத்தோன்றல் மனம் கசிந்து வணங்கி நின்ற நிலையினைப் பாடியருளினார் என்று குறிப்பிடுவதும் பொருத்தமே என்பது புலனாகிறது.

பெரிய புராணத்தில் நேச நாயனார் என்பவர் ஒருவர். இவர் காம்பீலி நகரத்தில் சாலியர் குலத்தில்

தோன்றியவர். அதாவது ஆடை செய்யும் தொழிலுடை மரபினர் என்பது. இவர் மனத்தால் இறைவரைச் சிந்தித்து, வாக்கால் திருவைந்தெழுத்து ஓதுபவர். தம் திருக்கரத்தால் கீள், கோவணம் நெய்து சிவனடியார் கட்கு ஈந்து இன்புறுபவர். இவரைப் பற்றிச் சேக்கிழார் பாடும் பாடல்கள் ஐந்து. அவற்றுள் ஒன்று,

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த ஐந்தெழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க் காகப்
பாங்குடை உடையும் கீளும் பழுதில்கோ வணமும் நெய்வார்

என்பது.

இந்தப் பாடலையும், திருவாசகத்தில் திருச்சதகப் பகுதியில் மூன்றாவதான சுட்டறுத்தல் என்னும் தலைப் பின்கீழ் உள்ள ஆறாவது பாடலாகிய,

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே

என்ற பாடலையும், அன்பர்கள் ஆழ அழுந்தப் பன்முறையும் பயின்று ஓதி அருளுமாறு வேண்டுகிறேன். இங்ஙனம் ஓதியதன் முடிபு, "இவ்விரு பாடல்களின் கருத்தும் ஒன்றுபட இயைந்துள்ளது" என்பதை மறந்தும் கூற முடியாது என்பது புலனாகும். இவ்விரு பாடலிலும் "ஆக்கி" என்னும் மொழி பயிலப்பட்டு வந்துள்ளது. "மனத்தின் செய்கை அரனடிப் போதுக்காக்கி" என்

பதும் "சிந்தனை நின்தனக்கே ஆக்கி" என்பதும் ஒத்த பொருள்தரும் தொடராகும். "வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக்காக்கி" என்னும் தொடர்ப் பொருளும் "வாக்கு உன் மணிவார்த்தைக் காக்கி" என்னும் தொடர்ப் பொருளும் இயைந்து நிற்றலைக் காண்க. இங்ஙனம் சொல்லும் பொருளும் ஒத்த நிலையில் இவ்விரு பாடல்களும் ஒத்துக் காணப்படுதலை உற்று நோக்கும்போது, முன்னவரான மணிமொழியார் வாக்கினைப் பின்னவரான சேக்கிழார் பெருமானார் தழுவி எழுதியுள்ளார் என்பது வெள்ளிடைமலையென விளங்குகின்ற தன்றோ?

இறுதியாக ஓர் இடத்தினையும் காட்டி இந்நூலினை இனிதின் முடிப்போமாக.

திருவாதவூரர் திருவாய்மலர்ந்த திருவாசகத்தினில் குலாப்பத்து என்னும் பகுதியுள்ளதை எவரும் அறிவர். அப்பகுதியின் முதற்பாடல்,

ஓடும் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

என்பது.

இப்பாடலில் வந்துள்ள, "தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து" என்னும் தொடர்ப் பொருளைத் தம் பெருநூலில் தக்க இடத்தில் அமைத்துப் போற்றிக்கொள்ளவேண்டுமென்ற பெருவிருப்பங் கொண்டனர் போலும் சேக்கிழார் பெருமானார்! அதற்குரிய இடமாக அவர் உள்ளத்தில் உதித்த இடம் சேரமான் பெருமான் நாயனார் வரலாற்றினைக் கூறப் புகும் இடமாகும். நாயனார் அரசப் பதவியினை அடைந்

தாமும் அரனடிப் போதினை மறவாத நிலையினைப் பெற்றார். தாம் அரசப் பேற்றின் பயனையும், நிறைந்த தவத்தினையும், தேடும் பொருளையும் துணையையும் வேறு எவற்றையும் கொள்ளாமல், இறைவர் கழலே அவை அனைத்தும் என்ற உள்ளம் கொண்டவர். இவற்றை எல்லாம் தொகுத்துச் சேக்கிழார் பெருமானார்,

"நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடும் கழலே" எனத்தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேல் கொண்டார்சோழர் குலப்பெருமாள்

என்று கூறியுள்ளார்.

"தேடும் பொருளும் சிவன்கழலே" என்னும் திருவாசகத் தொடரும், "தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் ஆடும் கழலே" என்னும் பெரியபுராணத் தொடரும் ஒற்றுமைப்பட்டுக் காணப்படுதலைக் காணலாம். ஆகவே, சேக்கிழார் பெருமானார் இத்தொடரைத் திருவாசகத்திலிருந்து எடுத்தார் என்பதில் ஐயம் தோன்றுமா? தோன்றப் பெறுதன்றோ? ஆனால், ஒருசிலர் "திருஞானசம்பந்தப் பெருமானார் திருத்தில்லைப் பதிகத்தில் பாடியுள்ள,

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே

என்ற பாடற் பொருளினைத் தழுவி ஏன் இருத்தல் கூடாது? இது திருவாசகப் பொருளினையே தழுவி வந்திருக்கவேண்டுமோ?" என்றுகூட வினவலாம். ஆனால், சிரபுரக்கோன் செம்மொழி செல்வன்கழல் ஏத்தும் செல்வம் செல்வமே! என்று கூறுகின்றதே அன்றித்

"தேடும் பொருளும் சிவன் கழலே" என்றும், "தேடும் பொருளும் ஆடும் கழலே" என்றும் கூறப்பட்டுள்ள தொடரைப்போல இன்மையின், புகலியர்கோன் புனித மொழியினைத் தழுவி எழுதப்பட்டது என்று கூறுதற் கின்றி, மணிமொழியார் மாசறு மணிமொழிகளைக் கொண்டு பாடப்பட்டதென்பது சிந்தித்தபோது தெளி வாகும் உண்மையாகும்.

ஆகவே, இதுவரை கூறிவந்த காரணங்களால் சேக்கிழார் பெருமானார் மாணிக்கவாசகரிடத்தும், அவர் யாத்த திருவாசகத்தினிடத்தும் ஈடுபாடு மிகுதியும் உடையவர் என்பதும், திருவாதவூரர் வரலாற்றினை வெள்ளிடை மலையென விளக்கமுறக் கூறாமல்போயி னும் பொய்யடிமை இல்லாத புலவர் புராணத்துச் சைவப் பெருமக்கள் உய்த்து உணர்ந்து கொள்ளட்டும் என்ற முறையில் இலைமறை காய்போல் தம் நூலில் இணைத்துப் பேசியுள்ளார் என்பதும், அங்ஙனம் பேசிய தோடு நில்லாமல், திருவாசகத் தொடரையும் பொருளை யும் ஆங்காங்குத் திருத்தொண்டர் புராணத்தில் அமைத் துப் பாடியுள்ளார் என்பதும் புலனாகின்றன. இத்தகைய நூலினை எழுதத் தூண்டிய என் பிறவிக்கு வணக்கம் செலுத்த வகையறியாது திகைத்த நேரத்தில் எனக்குத் தெய்வப்புலவராம் சேக்கிழார் பெருமானார் பாடியுள்ள

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழஎடுத்து
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்

என்ற பாடல் நினைவுவர, அதனையே கூறி இந்நூலினை இனிதின் முடிக்கின்றனன்.

திருச்சிற்றம்பலம்.